Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 04 | 20-07-94 | புதன்கிழமை | ஓசை 152

## தோலகட்டி நெல்லிரசத்தின் உற்பத்திக்குத் தடை

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனமும், யாழ். பிராந்திய சுகாதார திணைக்கள உணவு, மருந்து பரிசோதகரும் இணைந்து யாழ். குடாநாட்டில் அண்மையில் மேற்கொண்ட திடீர்ப்பரிசோதனை ஒன்றின்போது தோலகட்டி ஆச்சிரமத்தினரால் தயாரிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படும் நெல்லிரசத்தில் தடை செய்யப்பட்ட சக்கரீன் கலந்திருப்பதுடன் சுகாதாரமற்ற முறையில் தயாரிக்கப் பட்டிருப்பதும் பகுப்பாய்வின் மூலம் கண்டு (5 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழ நிர்வாகசேவை உதயம்; யாழ்.நகரில் பணிமனை திறப்பு

(யாழ்ப்பாணம்)

**தமிழீழ நிர்வாக சேவை யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை ஆரம்பித்து வைக்கப் பட்டது. இதற்கான பணிமனையை வைபவரீதியாக அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் திறந்துவைத்தார். இவ் வைபவத்தில், விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களும், அரசாங்க உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.**

தமிழீழ நிர்வாக சேவையின் ஆரம்ப வைபவம் நேற்றைய தினம் காலை 9.30 மணி முதல் நடைபெற்றது. அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. . . தமிழ்ச்செல்வன் தமிழீழ நிர்வாக சேவைப் பணிமனையைத் திறந்து வைத்தார். முன்னதாக தேசியக் கொடியை, தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஏற்றிவைத்தார். பணிமனையின் பெயர்ப்பலகையை காவல்துறைப்பொறுப்பாளர் நடேசன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

விடுதலைப்போரில் வீரச்சாவடைந்த போராளிகளுக்கும், பொதுமக்களுக்கும் மௌன அஞ்சலியை செலுத்திய பின் பணிமனை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் டொமினிக் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மற்றும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மங்கள விளக்கை ஏற்றி வைத்தார். தொடர்ந்து அரச திணைக்களங்களினதும் அரச சார்பற்ற அமைப்புகளினதும் பிரதிநிதிகள் மங்கள விளக்கினை ஏற்றிவைத்தனர்.

வரவேற்பு உரையினைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் சிறப்புரையாற்றினார்.

பணிமனையில் பணிபுரியும் ஊழியர்களுக்கான நியமனப் பத்திரத்தை டொமினிக் (6 ஆம் பக்கம் பார்க்க)

## பொது அறிவு தேர்வு

2-ம் தவணை பொது அறிவு தேர்வு, முன்னர் அறிவிக்கப்பட்டவண்ணம் ஆண்டு 6-11 மாணவர்க்கு இன்றும், ஆண்டு 12, 13 மாணவர்க்கு நாளையும் நடைபெறும். பாடசாலை அதிபர்கள் தமது கோட்டக்கல்வி அலுவலகங்களில் வினாத்தாள் பொதிகளை காலை 8-00 மணிக்கு பெற்று பரீட்சை செவ்வனே நடைபெற உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

வியாழன் - வால்வெள்ளி மோதலால்

## தொலை நோக்கிகள் செயலிழந்தன

ஷூமேக்கர் லெவியின் ஏழாவது துண்டான '3' நேற்று அதிகாலை வியாழன் கோளுடன் மோதியது. இதுவரை மோதிய வால்வெள்ளியின் துண்டுகளில் இதுவேமிகப்பெரியது. இம்மோதலால் மீண்டும் வியாழன் கோளில் பூமியளவுக்கு பள்ளம்தோன்றியுள்ளது, மிகப்பெருமளவு வெடிப்பு சக்தி வெளிப்பட்டது.

இம் மோதலை 79 கோடி கிலோ மீற்றருக்கப்பால் பூமியிலிருந்து நோக்கிக்கொண்டிருந்த தொலை நோக்கிகள் மோதலினால் ஏற்பட்ட பெரும் ஒளிப்பிளம்பினால் ஒரு கணம் செயலற்று ஸ்தம்பித்ததா (6 ஆம் பக்கம் பார்க்க)

## சுற்றிவளைப்பு தேடுதல் சட்டத்துக்கு முரணானது

### பிரான்ஸ் வானொலி தெரிவிப்பு

(கொழும்பு)

அவசரகால சட்டம் காலாவதியான நிலையில் கூட தொடர்ந்து சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதற்கு உரிய அதிகாரம் எந்த ஒரு சட்டத்தின் மூலமும் வழங்கப்படவில்லை எனவும் பிரான்ஸ் வானொலி தெரிவித்துள்ளது.

தொடர்ந்து இராணுவத்தினரும், பொலிசாரும் வீதிகளில் வாகனங்களை சோதனையிடுவதாகவும் தடுப்புக் காவலில் உள்ளோர் தொடர்ந்து தடுப்புக்காவலில் இருப்பதாகவும் இது தற்போதைய சாதாரண சட்ட முறைக்கு முரணானது எனவும்பிரான்ஸ் வானொலி மேலும் தெரிவித்துள்ளது.

## புலிகளை தாக்க பதுங்கியிருந்த படையினர் மீது தாக்குதல்

(திருமலை)

திருமலை மாவட்டம் வீரமாநகரில் விடுதலைப் புலிகளைத் தாகும் நோக்குடன் நிலையெடுத்திருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் உயர் அதிகாரி கொலலப்பட்டதுடன் சில இராணுவ தளபாடங்களும் கைப்பற்றப்பட்டன. இம் மோதலின்போது புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

கடந்த 17-ம் திகதி மாலை 3.10ற்கு ஆரம்பமான இத் தாக்குதல் சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றது. இதன்போது பதுங்கியிருந்த இராணுவத்தினருக்கு உதவிக்கென கட்டைப் பறிச்சான், பள்ளிக்குடியிருப்பு, சம்பூர் பகுதி முகாம்களிலிருந்து பல படையினர் வந்தனர். இதன்போது இவர்களுக்கு உதவியாக உலங்குவானூர்தி ஒன்றும் கலிபர் தாக்குதலை நடாத்தியது.

## வட-கிழக்கு வேட்பாளருக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கும், அவர்களின் ஆதரவாளர்களுக்கும் தற்போது அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் 'லங்காதீப' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வேட்பாளர்களுக்கு விசேட பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் நோக்குடன் இராணுவ - பொலிஸ் கூட்டு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## மேலதிக பாதுகாப்பு சந்திரிகா கோருகிறார்

பொதுஜன ஐக்கிய முன்னணியின் கம்பஹா மாவட்ட பிரதம வேட்பாளரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவியுமான சந்திரிகா குமாரணதுங்கா தனக்கு மேலதிகபாதுகாப்பு வேண்டும் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சைக் கேட்டுள்ளார்.

இது குறித்து தற்போது பாதுகாப்பு அமைச்சு விரிவாக ஆராய்ந்து வருவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறினார்.

## மண்டைதீவுக் கடலில் மீனவர் ஒருவர் கைது

## தேர்தலில் பணியாற்ற

மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் உயர் அதிகாரி கொலலப்பட்டதுடன் 3.10றகு ஆரம்பமான இத்தாக்குதல் சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்றது. இதன் இதன்போது இவர்களுக்கு உதவியாக உலங்குவானூர்தி ஒன்றும் கலிபர் தாக்குதலை நடாத்தியது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# வீரமாநகர் மோதலில் இரு போராளிகள் வீரச்சாவு

(திருகோணமலை)

திருமலை மாவட்டம் வீரமாநகரில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே கடந்த 17-ம் திகதி நடைபெற்ற கடும் மோதலின் போது இரு போராளிகள் வீரச் சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த கப்டன் தமிழ்மாறன்/சுமித் (வைத்திலிங்கம் சந்திரகுமார் - திருகோணமலை) லெப்டினன்ட் நக்கீரன்/கௌசிகன் (சண்முகம் யோகமலன் - திருகோணமலை) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



கப்டன் தமிழ்மாறன் (சுமித்)



லெப். நக்கீரன் (கௌசிகன்)

## வீரச்சாவு

மன்னாரில் கடந்த 14ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற நேரடி மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் அமல் (அருளப்பு கிறிஸ்ரி

(6ஆம் பக்கம் பார்க்க)



லெப். அமல்

# மண்டைதீவுக் கடலில் மீனவர் ஒருவர் கைது

(குருநகர்)

மண்டைதீவு-குருசடித் தீவுக் கடலில் மீன்பிடியில் ஈடுபட்டு நின்ற மீனவர்களை நோக்கி திடீரென துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டுவந்த சிறிலங்கா ராணுவம் சுற்றி வளைத்து ஒருவரை பிடித்துச் சென்றது.

நேற்று அதிகாலை 4 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவருடன் கூடச் சென்ற மீனவர் ஒருவர் காயமெதுவும் இன்றி தப்பிவந்தார்.

இந்தியாவில் அகதியாக கடந்த மூன்று வருடங்கள் இருந்துவிட்டு சமீபத்தில் தாயகம் திரும்பிய குருநகர் தண்ணீர் தாங்கி வீதியைச் சேர்ந்த கிட்லர் விஜேயினி பைக்ரோ சந்திரகுமார்(பாபு) வயது-27 என்னும் மீனவரே சிறிலங்கா ராணுவத்தினரிடம் சிக்கியுள்ளவரென தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக உறவினர்கள் சர்வதேச செஞ்சிலு

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# மீனவர் கைது குறித்து ஜெனிவாவிற்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கடற்பகுதியில் நேற்றுக்காலை இராணுவத்தினரால் கைது செய்யபபட்ட இளைஞர்பற்றிய தகவல்களை அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தின் யாழ் வதிவிடப்பிரதிநிதி கொழும்பு ஊடாக ஜெனிவா தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

தமிழ் நாட்டில் அகதியாகத் தஞ்சமடைந்திருந்து கடந்த பெப்ரவரி மாதம் இலங்கை திரும்பிய மரியதாஸ் கிட்லர் விஜேயினி பைக்ரோ சந்திரகுமார் (வயது 27) என்ற இளைஞர் நேற்று மண்டைதீவு கடற்பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த வேளை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ் தானிகராலயத்தின் யாழ் வதிவிடப் பிரதிநிதி அசோக்குமார் இது பற்றி தெரிவிக்கும் போது, கொழும்பு காரியாலயம் ஊடாக கைதானவர் பற்றிய தகவல்

(6ஆம் பக்கம் பார்க்க)

# இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

# மோட்டார் ஊர்திகள் திருத்துனர் கவனத்திற்கு

ஊர்தி திருத்தும் நிலையங்களில் திருத்துவதற்காக வைத்திருக்கும் அனைத்து ஊர்திகளும் தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்தில் பதிவுக்குட்படுத்தப்பட்டு தமிழீழ அடையாள இலக்கம் பெற்றிருத்தல் வேண்டும். ஆனால் சில ஊர்தி திருத்தும் நிலையங்களில் காணப்படும் மோட்டார் ஊர்திகள் பதிவுக்குட்படுத்தப்பட்டு இலக்கத்தகடு இன்றி நிற்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (6ஆம் பக்கம் பார்க்க)

# அனுராதபுரம் மாவட்டத்தில் பொலிஸ் விடுதிமீது தாக்குதல்

## பல பொலிசார் படுகாயம்

(அனுராதபுரம்)

அனுராதபுரம் மாவட்டம் மகாவலாட்சிப்பகுதி சிறிலங்கா பொலிஸ் விடுதிமீது நேற்று முன்தினம் நள்ளிரவு விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த்தாக்குதலில் பல பொலிசார் படுகாயமடைந்தனர் இவர்களது ஆயுதங்கள விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலின் போது படுகாயமடைந்த பொலிசார் தப்பியோடிவிட்டனர். இதன் போது பின்வரும் ஆயுதங்கள் புலிகளால் கைப்பறறப்பட்டன.

- ★ 203 பிஸ்டல் -01
- ★ இதன் ஷெல் -12
- ★ ஏ கே ரவைக்கூடு -3
- ★ கோல்சர் -1
- ★ நடுத்தர ரவைகள் -150
- ★ ஜே. ஆர். ரக கைக்குண்டு -2
- ★ கிற்பாக் -1
- ★ சப்பாத்து -2 சோடி
- ★ மில்ரி பெலிற்-1

# தேர்தலில் பணியாற்ற தமிழர்கள் மறுப்பு

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தேர்தல் கடமையை மேற்கொள்வதற்கு தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்கள் தயக்கம்காட்டிவருவதாகதேர்தல் திணைக்கள அதிகாரியொருவர் 'லங்காதீப' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இதற்கு மாற்றீடாக நடவடிக்கையொன்றை மேற்கொள்ளும் நோக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் தொடர்பாக உத்தியோகத்தரை அனுப்புவது தொடர்பாக முழு அளவிலான நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் இதற்கு விமானப்படையினரின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# காரைநகரில் ஊரடங்கு

காரைநகரில் கடந்த சில வாரங்களாக ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்களின் நடமாட்டம் படையினரால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பாதுகாப்பிற்கு இடையூறாக இருப்பதாக கருதப்படும் கட்டடங்களும் வீடுகளும் படையினரால் தரைமட்டமாக்கப்படுகின்றன.

# வெற்றிக்கிண்ணம் யாருக்கு? பரிசு பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வெற்றிக் கிண்ணம் யாருக்கு? என்ற தலைப்பில் உலகக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டி தொடர்பாக ஈழநாதம் மக்கள் தினசரி நடத்திய போட்டியில் பின்வருவோர் பரிசில்கள் பெறுகின்றனர்.

முதலாம் பரிசு — 500 ரூபா
**திருமதி பி. நவமணி,**
கண்டி வீதி, மிருசுவில்.

இரண்டாம் பரிசு — 300 ரூபா
**எஸ். நொயலின்,**
141, மவுண் கார்மல் வீதி, யாழ்ப்பாணம்.

மூன்றாம் பரிசு — 200 ரூபா
**என். உமாசங்கர்,**
38, சங்கிலியன் வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு; மேற்படி போட்டிக்கு ஆயிரக் கணக்கான கூப்பன்கள் கிடைக்கப் பெற்றபோதும் ஐவர் மட்டுமே சரியான தெரிவை அனுப்பி வைத்தனர். இவர்களில் மூவர் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

பரிசுத் தொகையை காரியாலய நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

15-7-94 அன்று மட்டுவிலில் இருந்து யாழ்-செல்லும் வழியில், சிங்கர் கத்திரிக்கோல் அடங்கிய பார்சல் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள், யாழ். ஆஸ்பத்திரி முன்பாக உள்ள கௌரி தொழிலகத்திலோ அல்லது-உஷா கம்பனியிலோ- சிங்கர் கம்பனி சாவகச்சேரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (சி 9957)

### பாலர் விளையாட்டுவிழா

வளர்மதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல் இரண்டு மணியளவில் யாழ் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது பாடசாலை பொறுப்பாசிரியை திருமதி தனேஸ்வரி குணநாதன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக நாவலர் மகா வித்தியாலய அதிபர் ஏ துரைராசாவும், சிறப்பு விருந்தினராக பாலர் கல்விக் கழகத்தலைவர் ஆ. செல்லையாவும், கௌரவ விருந்தினராக மாணவர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி வினோ மாரியபிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### ஆடிவேல் ரதம் எடுத்து வரப்படுகிறது

தமிழீழ ஆடிவேல் விழாவுக்கான வேல்ரதம் இன்று பிற்பகல் ஆறு முப்பது மணியளவில் மின்சாரதீபங்களால் அலங்கரிக்கப்பட்டு சிற்பக் கலைஞர் ஆறுமுகம் கந்தசாமி ஆசாரியார் கலைக் கூடத்திலிருந்து ஆலயத்தை வந்தடையவுள்ளது.

ஆடிவேல் விழா எதிர்வரும் திங்கள் முதல் மூன்று தினங்கள் கொண்டாடப்படவுள்ளது தெரிந்ததே.

### கண்டெடுப்பு

கை மணிக்கூடு ஒன்று கல்வியங்காட்டில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அடையாளம் காட்டிப்பெற்றுக்கொள்ளவும்

★ ★ ★

திருநெல்வேலி ஆடியபாதம் வீதியும், இராசபாதைவீதியும் சந்திக்கும் சந்தியில் கடந்த

# வறுமை நிவாரணத்திற்கு கூடியவிலை மைசூர்பருப்பு

(யாழ்ப்பாணம்)

வறுமை நிவாரண உணவு முத்திரைக்கு அதிகரித்த விலையில் மைசூர்பருப்பு பாவனையாளர்களுக்கு யாழ் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தினால் திணிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி தெரியவருவதாவது இம்முறைவறுமை நிவாரண உணவு முத்திரைக்கு பெரும்பாலான பலநோக்கு கூட்டுறவு சங்கங்களால்முழுத்தொகைக்கும்நாட்டரிசி வழங்கப்பட்ட போதிலும் யாழ்ப்பாண பலநோக்குக்கூட்டுறவுச்சங்கம்தான் அதிகரித்த விலையில் கிலோ 40 ரூபா வீதம் ஒன்றரைக்கிலோமைசூர் பருப்பையும் 35 ரூபா 50 சதவீதம் சீனியையும் கட்டாயத்தின் பேரில் பாவனையாளர்களுக்கு விநியோகித்துள்ளது.

இதுபற்றி வேறு கிளைகளில் உள்ள பாவனையாளர்களை விசாரித்தபோது தங்களுக்கு வறுமை நிவாரண உணவு முத்திரைக்கு 100 வீதமும் நாட்டரிசியே வழங்கப்பட்டதாகவும் மாணவர் மதிய உணவு முத்திரைக்கு 80 வீதம் அத்தியாவசிய பொருள்களும் 20 வீதம் வேறு பொருள்களும் வழங்கியதாகவும் தெரிவித்தனர்.

மைசூர்பருப்பானது கிலோ ஒன்று 26 ரூபாவீதம் ஏனைய பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்களால் விநியோகிக்கப்படுவதும் யாழ்பலநோக்குகூட்டுறவுச்சங்கத்தினால் 40 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுவருவது பற்றியும்முன்னர் செய்தி வெளிவந்தது தெரிந்ததே (சி)

### புதிய மண்டபம் திறந்து வைப்பு

முல்லை மாவட்ட ஆனந்தபுரம் பாடசாலைக்கான புதிய மண்டபத் திறப்பு விழா கடந்த பதினோராம் திகதியன்று இடம் பெற்றது. ஆனந்தபுரம் கிராமியப் பொறுப்பாளரின் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமான இவ் விழாவில் முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் சம்பிரதாய பூர்வமாக மண்டபத்தை திறந்து வைத்தார். முற்றிலும் உள்ளூரில் கிடைக்கக் கூடிய மூலப் பொருட்களைக் கொண்டு சுமார் ஒரு லட்சத்து அறுபத்தையாயிரம் ரூபா செலவில் இம் மண்டபம் தமிழீழபொருண்மியமேம்பாட்டு நிறுவனத்தால் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### குருபூசை

ஈழத்தில் மெய்கண்டதேவர் ஆதீனத்தை நிறுவிய சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளின் பதினைந்தாவது குருபூசை நாளை சிறாம்பியடி கலைப்புலவர் வீதியிலுள்ள திருவாசக மன்றத்தில் நடைபெறவுள்ளது


### விற்பனையில் சலுகை

சகல விதமான

★ மணிக்கூடு பற்றரிகள்
★ சார்ஜர் பற்றரிகள்
★ வீடியோ ஹெட் (Video head)

என்பன துரித கதியில் விற்பனையாகின்றன.

தொடர்புகட்கு:

★ மின்வளம் ★

இல 81, லெப். கேணல் சந்தோசம் தெரு, யாழ்ப்பாணம்.

குறிப்பு:

தொலைக்காட்சி பெட்டிகள், வீடியோ டெக், ஒடியோ செற் வகைகள் நல்ல விலைகொடுத்து கொள்வனவு செய்யப்படும்.

(சி-9946)



## பணிநிலை வெற்றிடம்

சுருக்கெழுத்து / தட்டெழுத்தாளர் (தமிழ்)

நீதி நிர்வாகத்துறையின் கீழ் இயங்கும் முல்லை மாவட்டத்திற்கான தமிழீழ நீதிமன்றிற்கு, மேற்படி பணிநிலைக்கான விண்ணப்பங்கள் தகுதி உடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பம் செய்ய விரும்புவோர் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை 30-07-1994 ஆம் திகதிக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

பொறுப்பாளர்
நடுவபணியகம்,
**தமிழீழ நீதி நிர்வாகத்துறை**
தமிழீழம்.

(1831)



தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்

## முக்கிய அறிவித்தல்

கீழ்க்காணும் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் அனைத்து உற்பத்தியாளர்களுக்குமான முக்கிய கலந்துரையாடல்கள் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன. அவ்வுற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்கள் இக் கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| | | |
|---|---|---|
| 01. | மென்பானம், பழரசம், நெல்லிரசம், இனிப்பு, ரொபி, சொக்லேற், கற்கண்டு, வெல்லம், கச்சான் அல்வா, எள்ளு அல்வா, ஜாம். | 20-07-94 பி. ப. 3-00 மணி |
| 02. | அப்பளம் | 21-07-94 பி. ப. 3-00 மணி |
| 03. | தும்புத்தடி, ஈர்க்குத்தடி, கயிறு, நெசவு - கைத்தறி, மின்தறி. | 22-07-94 பி. ப. 3-00 மணி |
| 04. | சித்தமருந்துவகை | 23-07-94 காலை 10-00 மணி |

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்

230, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி-9956)


## மூன்றாம் ஆண்டில் உன் நினைவுடன்...



ஈழத்தில் முத்தாக
28. 03. 1972

தமிழீழ சொத்தாக
20. 07. 1991

## நினைவு கூருகின்றோம்...

### 20-07-1994...

1987-ம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - அச்சுவேலியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவெய்திய,

**சுரேஷ்** (குணரட்ணம் குலேந்திரன் - பொற்பதிவீதி, கொக்குவில் கிழக்கு - யாழ்)

**கெனடி** ( - - - )

இதே தினத்தில் வீரச்சாவெய்திய,

★ **வேலாப்போடி தேவிகவி** ( ஆயித்திய மலை - மட்டு)
★ **கதிர்காமத்தம்பி கிருஷ்ணவேணு** (ஆயித்தியமலை - மட்டு)
★ **மோகன்** ( ப. மோகனதாஸ் - மணற்சேனை - திருமலை)
★ **கிருஷ்ணபிள்ளை இன்பராசா** (சல்லிப்பிட்டி - திருமலை)

மட்டு - கோரக்கல்லி மடுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் எரிக்கப்பட்ட வீட்டினுள் கருகிமாண்ட மூன்றுவயதுக் குழந்தை.

1989-ம் ஆண்டு சண்டிலிப்பாய் - தொட்டிலடிச் சந்தியில் தேசவிரோதிகளால் சுடப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**திருநாவுக்கரசு பாலேந்திரா (பாலா)** (கல்வளை - சண்டிலிப்பாய்)

1990-ம் ஆண்டு கொம்படிப் பகுதியில் சிறிலங்கா வான்படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**சேவியர்** (ஐயம்பிள்ளை இரத்தினபாலசிங்கம் - வட்டக்கச்சி - கிளிநொச்சி)

மட்டுநகரில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட விவசாயியான வந்தாறுமூலை செட்டியார் வீதியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991-ம் ஆண்டு ஆ. க வெ. நடவடிக்கையின் போது வெற்றிலைக்கேணியிலிருந்து முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**லெப். ராகுலன்** (வேலாயுதம் ஜெயரூபன் - மாவடி வீதி, வாழைச்சேனை மட்டு)
**விஜி** (செல்லத்துரை சிற்றம்பலம் - இ. வி. வீடமைப்புத்திட்டம் - மட்டு)
**லெப். அர்ஜுன்** (சிவானந்தன் நந்தகோபால் - மனையாவெளி - திருமலை)
**கில்பேட்** (மயில்வாகனம் விஜயகுமார் - செல்வபுரம் - திருமலை)
**லலித்** (வேல்முருகு விஜயகுமார் - 3-ம் கட்டை, குச்சவெளி - திருமலை)
**2-ம் லெப். பானுமதி** (செல்வகுமாரி செல்வராசா - நெடுங்கேணி - மணலாறு)
**ஜெயா** (முருகையா ஜெயசீலன் - புதுமுறிப்பு, உருத்திரபுரம் - கிளிநொச்சி)
**யூலியட்** (ஆன் அனுசியா மரியதாஸ் - ஜெயந்தி நகர் கிளிநொச்சி)
**தர்சினி** (ரஞ்சினி அருளம்பலம் - உருத்திரபுரம் - கிளிநொச்சி)
**நாகேஸ்வரி** (பிரபாவதி சந்தான்-சென்மேரிஸ் வீதி,

சந்திக்கும் சந்தியில் கடந்த திங்களன்று கண்டெடுக்கப்பட்ட ஒரு தொகைப் பணம் எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்-

## உற்பத்திக் குழுவுக்கு பயிற்சி வழங்கல்

கிராமிய உற்பத்திக் குழுக்களின் செயற்பாட்டைத் துரிதமாக்கும் நோக்கத்துடன் இக் குழுவின் அங்கத்தவர்களுக்கான பயிற்சிகளை தமிழீழ பொருளாதார மேம்பாட்டு நிறுவனம் வழங்கி வருகிறது.

கிராமத்திலுள்ளவளங்களை இனங்காணுதல், தொழில், நுட்பவியலாளர்களை இணைத்தல், மக்களைத் தேவையான உற்பத்தியில் ஈடுபடவைத்தல் போன்றவை இப் பயிற்சியின் முக்கிய அம்சங்களாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஆய்வுகூட பரிசோதகர் இல்லை

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஒரு வருட காலமாக மருத்துவ ஆய்வுகூட பரிசோதகர் இல்லாததினால் இரத்தம், சலம் பரிசோதனைகள் செயலிழந்துள்ளன.

இவ் உத்தியோகத்தர் இல்லாததினால் நோயாளிகள் மேற்குறித்த பரிசோதனைகளை செய்ய முடியாமல் அவதிப்படுகின்றனர்.

முன்னர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இருந்து வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு இவ் உத்தியோகத்தர் வாரத்தில் இரு தடவைகள் வந்து இப்பரிசோதனைகளை செய்து வந்த போதிலும் கடந்த ஒரு வருட காலமாக இப் பரிசோதகர் வருகை தடைப்பட்டதால் நோயாளிகள் கஷ்ட நிலையை எதிர்நோக்கி வருகின்றனர் (யோ)

(சி-9946)

## 3-ம் ஆண்டு நினைவலைகள்



### 2ம் லெப்டினன்ட் விஜயா
### (ஜெயவதனி தம்பிப்பிள்ளை)

| பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 26 - 02 - 1970 | 20 - 07 - 1991 |

கல்லறையில் மலர்தூவி கண்ணீரால் மாலையிட்டு
எண்ணத்திரையில் உன் வண்ணமுகம் நிழலாட
நிஜமான உன் நினைவுகளை நெஞ்சத்திரையில்
- தான் நிறுத்தி
ஓர் முறையேனும் உனைக்காண எட்டிசையும்
தேடி ஓடும் விழியிரண்டும் கனல் வீசும்.

கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்க
வேண்டுகிறோம் ஆத்மசாந்தி -

'' ஜெயவாசா ''
அல்வாய் கிழக்கு. (8851)

அன்பு அம்மா,
அன்புச் சகோதரிகள்.



20. 07. 1991

### வீரவேங்கை தர்சினி
### (அருளம்பலம் றஞ்சினி)

அதர்மங்கள் ஒழிய அன்னியனை விரட்ட
கட்டைக் காட்டினில் காவியமானாலும்
உன் களத்தோழியரிலும் உன் பள்ளித் தோழியரிலும்
உன் சாயல் காண்கின்றோம் உனை நாம்
காண்கின்றோம்.

உன் நினைவில்
அப்பா, அம்மா,
சகோதர, சகோதரிகள்.

இல, 52 ட-10,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி. (8831)

## அந்தியேட்டி அழைப்பிதழ்



நீராய்:
08. 07. 1911

நெருப்பாய்:-
21. 06 1994

### அமரர் வடிவேலு தம்பையா

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த அமரர் வடிவேலு தம்பையா அவர்களின் அந்தியேட்டி கிரியை நாளை (21. 07. 94) வியாழக்கிழமை அதிகாலை ரஞ்சிதம்இல்லத்தில் நடைபெற்று கந்தவன சமுத்திரத்தில் அஸ்தி கரைக்கப்படும். இதில் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

-குடுப்பத்தினர்

ரஞ்சிதஇல்லம்
பொலிகண்டி கிழக்கு,
வல்வெட்டித்துறை

(8856)

**நாகேஸ்வரி** (பிரபாவதி சந்தான்-சென்மேரிஸ் வீதி, அடம்பன் - மன்னார்)

**லெப். கொலின்** (சண்முகானந்தன் மணிவண்ணன் - பிள்ளையார்கோயிலடி மயிலிட்டி - யாழ்)

**லெப். மேகன்** (பொன்னையா தமிழகன் - வேம்பிராய், நாவற்குழி - யாழ்)

**2-ம் லெப். இலக்கியன்** (சதிர்காமு இரவீந்திரராசா - அரியாலை கிழக்கு - யாழ்)

**2-ம் லெப். விஜயா** (ஜெயவதனி தம்பிப்பிள்ளை - - அல்வாய் மேற்கு - பருத்தித்துறை)

**நேரு** (சாம்பமூர்த்தி குமரேசன் - புத்தூர் மேற்கு - புத்தூர் - யாழ்)

**சோபிகா** (பராசக்தி கந்தசாமி கட்டுவிளான், ஏழாலை மேற்கு - யாழ்)

மன்னார் - வங்காலையில் முகாமிலிருந்து வெளியேறமுயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**வீனஸ்** (யோசப் கிருபைராசா (நேசன்) - புதுக்கமம் உயிலங்குளம் - மன்னார்)

மட்டு-பள்ளத்துச்சேனையில் எதிர்பாராதவிதமாக துப்பாக்கி வெடித்ததில் எம்மைப்பிரிந்த,

**ராமன்** (உதயகுமார் - கிரான் - மட்டு)

**ஜீவா** (நடராசா ரவி - கல்முனை 03 - அம்பாறை)

மணலாறு - நித்திகைக்குளம் பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**நிதி** (காத்தமுத்து சிவகுமார் - இலுப்பையடிச்சேனை பன்குடாவெளி - மட்டு)

தமிழீழ கடற்பரப்பில் (கற்கோவளம்-காரைநகர்) தொழிலிலீடுபட்டுக் கொண்டிருந்த போது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் பலியான தமிழ் கடற்தொழிலாளி.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

[சி-9942]

உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டி



# தங்க கிண்ணத்திற்காக பிரேசில் இறுதிவரைபோராடவேண்டிஇருந்தது

## 'பெனால்டி' உதைகளே வெற்றியை தீர்மானித்தன

உலகக் கிண்ண உதைபந்தாட்டம் '94 நிறை வெய்திவிட்டது. இத்துறை வல்லுநர்கள், சந்தர்ப்பம் அதிகம் கொண்ட நாடுகள் என்று எவற்றைக் குறித்து நின்றார்களோ அவற்றில் இரண்டு நாடுகளே இறுதியாட்டத்தில் கலந்து கொண்டன. பொதுவாக எந்தச் சுற்றுப்போட்டிகளிலும் இறுதி ஆட்டத்தினைவிட இடையில் வரும் ஆட்டங்களில் ஏதாவது ஒன்று மனதைக் கவர்ந்து விடுவது வழக்கம். ஆனால் இத்தாலி பிரேசில் இறுதியாட்டத்தில் தொடக்கம் முதல் முடிவுவரை பரபரப்புக்கும் அதிர்ச்சிகளுக்கும் எதுவித குறைவுமில்லாதவாறே அமைந்திருந்ததைக் குறிப்பிடவேண்டும்.

ஆட்டம் ஆரம்பித்து சில நிமிடங்களிலேயே இத்தாலி இரண்டு நேர் உதைகளைப் பெற்றுக்கொண்டாலும் அவற்றை சாதகமாக்க இயலவில்லை. பின்னர் வந்த 15 நிமிடங்களும் இரு அணியினரும் சராசரியாக ஒருவருக்கொருவர் பெரிதாக அழுத்தம் கொடுக்காத நிலையில் ஆடிக்கொண்டிருந்தார்கள். இதன்பின் இருதரப்பினரும் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்கள் இருதரப்பினாலும் தவறவிடப்படுகின்றன. பொதுவாக அணிகளுக்கு பற்பல சந்தர்ப்பங்கள் கிடைத்தாலும் கூட ஒன்றோ இரண்டோதான் வெற்றியாக அமைய முடியும். இவ்விறுதியாட்டத்தைப் பொறுத்தவரை இத்தாலியைவிட எப்போதுமே பிரேசிலின் கை மேலோங்கிக் காணப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இத்தாலிய வீரர் பரேஷியின் பந்துத்தடுப்பும் கோல்காப்பு வீரர் பக்லியுகாவின் பயிர்க்கூச்செறியும் பந்துக்காப்பும் ரசிகர்களை என்றும் இவர்களை நினைக்கவைக்கும். ஆரம்ப ஆட்டங்களில் கோல்போடும் முயற்சியில் இத்தாலிய றொபோட்டோ பாகியோ, பிரேசிலின் றொமாரியோ, பெபிடோ போன்றோர் உச்சநிலையில் ஈடுபட்டதை அவதானிக்கலாம். ஆனால் றொமாரியோ இத்தாலிய அணி வீரர்களின் கண்காணிப்புக்குள் வந்துவிட்டதால் தன்னிச்சைப்படி ஆட்டத்தை நிர்ணயிக்க இயலவில்லை. அதே போல றொபெட்டோ பாகியோ பந்தைப் பெற்றபோதுங் கூட பிரேசிலின் தடுப்புக்கும் ஆட்ட வேகத்துக்கும் இடம் கொடுக்க முடியாமல் போயிற்று. இருந்தும் இவ்விருவரும் ஒரு செக்கன் கண் அயர்ந்தால் கோல் போட்டே இருப்பார்கள். இருவருமே மேதைகள் தான் என்பதை சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் நிரூபித்தார்கள்.

மேலும் பந்தினைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதிலும் பந்தினைப் பறித்தெடுப்பதிலும் எப்பொழுதும் பிரேசில் வீரர்கள் விஞ்சியே இருந்தார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனாலும் இத்தாலிய பின்காப்பு, கோல்காப்பு இவர்களை மேலாதிக்கம் செய்யவிடவில்லை.

ஆட்டம் தொடங்கி 20 நிமிட நேரத்தில் பிரேசில் காபூ என்றொரு வீரரை களத்தில் இறக்கியது. பிரேசில் அணியினரைப் பொறுத்தவரை இவரின் அர்ப்பணிப்பும், எல்லையற்ற திறமையும் ரசிகர்களின் அவதானிப்பைப் பெற்றே இருக்கும் ஆட்ட முடிவு வரை இவர் இத்தாலிய அணிக்கு மிகப் பெரிய ஆபத்தாகவே இருந்தார் பந்தை எடுப்பதும் கோல் மத்திக்குக் கொடுப்பதும் இவருக்கு மிக இலகுவானதாக இருந்தது. ஆனால் ரசிகர்கள் ஆச்சரியத்தின் எல்லைக்குச் சென்றார்கள். இடைவேளை வரை இரண்டு அணிகள் என்னதான் முயன்றும் கோல் போட போல இருந்தது. அடுத்த 5வது நிமிடம் காபூ அடித்த பலமிக்க நீண்டதூர உதையொன்று பக்லியுக்காவின் கைகளையும் மீறிச் சென்று கம்பத்தினுள்ளே நுழையும் சமயம், கம்பத்தில் சிறிது பட்டு வெளியே சென்றபோது பிரேசில் ரசிகர்கள் திக்பிரமை பிடித்து அமர்ந்திருந்திருப்பார்கள் (பக்லியூக்கா கம்பத்தைத் தொட்டு முத்தமிட்டார்.)

தொடர்ந்தும் இருசாராரும் தாம் ஏதாவது செய்து ஆகவேண்டும் என்ற வேகத்தில் ஆடிக்கொண்டிருந்தாலும் எதுவுமே நடைபெறவில்லை. முழு நேர ஆட்டம் முடியும் போது 0-0 என்ற நிலையில் ஆட்டம் அரை குறையாகவே நின்றுவிட்டது இங்கு குறிப்பிடத்தக்கது. றொமாரியோ, பெபிட்டோ, ஜோடியையோ அல்லது றொபேட்டோ பாகியோ, டினோ பாகியோ சோடியையே இணைந்து செயற்படவிடாமல் இரு அணிகளுமே பார்த்துக் கொண்டது தான். முடிந்த ஆட்டங்களில் இவ்விரு சோடிகளும் இணைந்து செயற்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

ஆட்டம் மேலதிக நேரத்திற்குச் சென்ற போது பெனால்ட்டி முறை மூலம் தான் இவ்வாட்டம் நிர்ணயிக்கப்படப்போகிறது என்பது ஓரளவு ஊர்ஜிதம் ஆகிவிட்டது மேலதிக முதல் அரை வேளை ஆரம்பித்ததுமே பிரேசில் வீரர் றொமாரியோ திறமையாக அடிக்க இத்தாலிய கோல் காப்பு வீரர் திறமையாகவே காப்பாற்றி விடுகிறார். இதனிடையில் டினோ பாகியோ மைதானத்தை விட்டு வெளியேறுகிறார் அடுத்த நிமிடமே றொபெட்டோ பாகியோ அதிவேகமான உதையொன்றை 30யார் தூரத்தில் வைத்து அடிக்க டாபரல் உயரப் பறந்து கைகளால் தட்டியமை பிரேசிலைக் காப்பாற்றியது திரும்பவும் திரும்பவும் இவ்வரைப் பகுதியில் இத்தாலி வன்மையாக பிரேசிலை நெருக்கியது. இரண்டாவது அரைப்பகுதியின் ஆரம்பத்தில் இத்தாலி மீண்டும் அழுத்தம் கொடுக்க பின் அரைப் பகுதியில் பிரேசில் மீண்டும் அழுத்தம் கொடுக்கலாயிற்று. ஆனால் முடிவுகள் ஏதும் கிட்டவில்லை.



உலககால்பந்தாட்ட கதாநாயகன் றொமாரியோ



பெனால்ட்டி உதைமூலம் வெற்றிதோல்வி இறுதியாக நிர்ணயிக்கப்படும் வகையில் முதலாவது உதையை இத்தாலிய வீரர் பரேசி தொடங்கினார். இவரது உதை எதிர்பாராதவிதத்தில் கம்பத்திற்கு மேலால் சென்றது. தொடர்ந்த பிரேசில் வீரர் சன்டோசின் உதை இத்தாலிய கோல்காப்பு வீரரால் திறமையாகத் தடுக்கப்பட்டது. இரண்டாவது உதையை இத்தாலிக்காக அல்பெடீனி திறமையாக அடித்து கோலாக்கினார். அதேவேளை பிரேசில் சார்பில் றொமாரியோ தன்சந்தர்ப்பத்தையும் அழகாக கோலாக்கினார். இந்நிலையில் தலா இரண்டு உதைமூலம் இரு நாடுகளும் ஒவ்வொரு கோல் பெற்றிருந்தன.

மூன்றாவது உதையை இத்தாலிக்கு ஈவானி கோலாக்கிக்கொடுக்க பிரேசில் அணிக்காக பிராங்கோ மூன்றாவது உதையைக் கோலாக்கிக்கொடுத்தார். இப்போ தலா 3உதைகளில் இரு நாடுகளும் 2 கோல்களுடன் சமநிலையில் நின்றன.


நான்காவது உதையை பிரேசில் கோல் காப்பாளர் திறமையாகத் கணித்து தடுத்துவிட்டார். ஆனால்பிரேசிலிற்கான நான்காவது உதையை டுங்கா அபாரமாகக் கோலாக்கினார். இந்நிலையில் தலா நான்கு உதைகளில் பிரேசில் 3 இத்தாலி 2 என்ற வகையில் பிரேசில் முன்னணிக்கு வந்தது. இந்நிலையில் இத்தாலிசார்பாகறொபேட்டோபாகியோஇறுதியான

## யாழ். மாவட்டத்தில் சிறந்த வீரர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்திய மெய்வல்லுனர் போட்டிகளில் சிறந்த வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் விபரம்:

- **15 வயது ஆண்**
  பா. பாலமுரளி - யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி
- **15 வயது பெண்**
  க. நிஜா - யா/திருக்குடும்ப சன்னியர் மடம்
- **17 வயது ஆண்**
  தி. கணேஸ் - யா/பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி
- **17 வயது பெண்**
  யோ. ஜமினி - யா/அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்
  வி. விஜயபிரபா - யா/வேம்படி மகளிர் கல்லூரி
- **19 வயது ஆண்**
  ம கஜேந்திரன் - யா/கனகரத்தினம் ம. ம. வி.
  சி. அருட்குகன் - யா/கரவெட்டி விக்கினேஸ்வர வித்தியாலயம்
  பு. தர்சன் - யா/தெல்லிப்பழை யூனியன் கல்லூரி
- **19 வயது பெண்**
  சி. சிவதர்சினி - யா/வேம்படி மகளிர் கல்லூரி




15 வயது ஆண்
பா. பாலமுரளி - யா/உடுப்பிட்டி அ. மி. கல்லூரி



இருந்தது. ஆனால் ரசிகர்கள் ஆச்சரியத்தின் எல்லைக்குச் சென்றார்கள். இடைவேளை வரை இரண்டு அணிகள் என்னதான் முயன்றும் கோல் போட இயலவில்லை என்பதில் இருந்து ஆட்டம் எவ்வளவு வேகமும் விறுவிறுப்பும் கொண்டிருந்திருக்கும்என்பதை உணர்ந்து கொள்ள முடியும். இடைவேளையை அண்டிய போது இத்தாலி மேலோங்கிய நிலையில் பிரேசிலுக்கு அழுத்தம் கொடுத்தது விளையாட்டில் ஒரு திருப்பம் வரப்போகிறது என்று எண்ண வைத்தது.

இடைவேளையின் பின் 10 நிமிடங்கள் சென்ற பின் பிரேசில் வீரர் தலை மூலம் செலுத்த முயன்ற பந்தொன்றினை இத்தாலிய கோல்காப்பு வீரர் பக்லியூக்கா தரையில் இருந்து ஏறத்தாழ 4 அடி உயரத்தில் தரைக்குச் சமாந்தரமாக தாவித் தடுத்தது.போது சர்வதேச கோல்காப்புத் தரம் என்ன என்பதை அவர் எடுத்துக் கூறுவது



வகையில் பிரேசில் முன்னணிக்கு வந்தது. இந்நிலையில் இத்தாலிசார்பாகறொபேட்டோபாகியோஇறுதியான தும் ஐந்தாவதுமான உதையை மேற்கொண்டார். ஆனால் யாருமே எதிர்பார்க்காதபடி அதிர்ச்சிதரும் விதமாக பாகியோவின் உதை கோல்கம்பத்திற்கு மேலால் சென்றது ! இந்நிலையில் இத்தாலிய உதைகள் முடிந்துவிட்டன. பிரேசில் தனக்கு ஒரு உதை இருந்த நிலையில் 3-2 என்று முன்னணியில் இருந்தது எனவே ஐந்தாவது உதையை பிரேசில் அடிக்கத் தேவை இருக்கவில்லை. இந்த வகையில் உலகக்கிண்ண உதைபந்தாட்ட வரலாற்றிலேயே முதன்முதலாகபெனால்டிமூலம்வெற்றிதோல்விநிர்ணயமானது. இருந்தும் யாரும் பெரிதும் ரசித்து வரவேற்க இயலாத பெனால்டி உதை மூலம் 3-2 என்ற வகை

(4 ஆம் பக்கம் பார்க்க)



17 வயது பெண்

யோ. ஜமினி - யா / அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்.

வி. விஜயபிரபா - யா/வேம்படி மகளிர் கல்லூரி

## கோட்ட ரீதியாகப் பெறப்பட்ட புள்ளிகள்

| கோட்டம் | புள்ளிகள் |
|---|---|
| 1) மருதங்கேணி | 01 |
| 2) கோப்பாய் | 10 |
| 3) சங்கானை | 12 |
| 4) பளை | 19 |
| 5) சண்டிலிப்பாய் | 21½ |
| 6) தெல்லிப்பழை | 25½ |
| 7) சாவகச்சேரி | 29 |
| 8) நல்லூர் | 101 |
| 9) கரவெட்டி | 103 |
| 10) பருத்தித்துறை | 113½ |
| 11) யாழ்ப்பாணம் | 248½ |

# லெப். இளங்கோ வெற்றிக் கேடயத்தை சென். கென்றீஸ் தட்டிச் சென்றது

## திருமலை நட்சத்திர விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி - ஒருபார்வை

இ. சிறிதரன்

திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டுக் கழகத்தினர் நடாத்திய 3-ம் ஆண்டு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்று முடிவடைந்துள்ளது. போட்டிகள் நடைபெற்ற யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானம் சர்வதேச அளவினைக் கொண்டது. இதனால் விளையாட்டு வீரரின் திறமை கழகத்தின் தரம் என்பன மதிப்பிடலும் தவிர்க்க முடியாததாயிற்று வட [தமிழீழத்தில் இருந்து அழைக்கப்பட்ட 16 கழகங்கள் இச்சுற்றுப் போட்டியில் சலந்து கொண்டிருந்தன. ஆட்டங்கள் விலகல் முறையிலேயே அமைந்திருந்தன.

உலகக் கிண்ணப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் ரசிகர்கள், வீரர்கள் இருதரப்பாருடனும் அதன் பாதிப்புத் தென்பட்டது உலகக்கிண்ண வீரர்களின் பாவனைகள் இங்கும் தென்படலாயின. இது வரவேற்கத்தக்கதும் ரசிக்கத்தக்கதுமாக இருந்தது. சுற்றுப் போட்டியின் ஆரம்பத்தில் இருந்து போட்டிகள் படிப்படியாக பரபரப்பையும் விறுவிறுப்பையும் பெற்றுச் சென்று கொண்டிருந்தன. முதலாட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகமும், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும்மோதிஇறுதியில்பனால்டி முறை மூலம் அரியாலை ஐ. வி. கழகம் வெற்றி பெற்றது. இரண்டாவது போட்டியில் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் புங்குடுதீவு அம்பாள் வி கழகத்தை 6-1 என்றவாறு தோற்கடித்தது. அடுத்த போட்டியில் யாழ். பல்கலைக்கழகம், நாவாந்துறை வி. கழகத்துடன் எதிர்த்தாடி 1-0 என்று வெற்றி பெற்றது.

இரண்டாம் நாள் ஆட்டங்களில் அளவெட்டி விநாயகர் வி க. கொக்குவில் பொற்பதி வி.கழகத்தை 2-0 என்றவாறும், பாஷையூர் சென். அந்தனீஸ் வி. கழகம், மானிப்பாய் சில்வெஸ்ரர் வி. கழகத்தை 3-1 என்றவாறும் காங்கேசன் துறையங் றோயல் வி கழகம், வதிரி டைமன் வி கழகத்தை 5-0 என்றவாறும் வெற்றி கண்டன.

தொடர்ந்த முதற்சுற்றில் ஆனைக்கோட்டை அறிவொளி ஐக்கிய விளையாட்டுக் கழகம், றோயல் வி கழகத்திடம் 3-1 என்றவாறு தோற்றுப் போயிற்று. இளவாலை சென்கென்றீஸ் வி கழகமும், சென். நிக்கலஸ் வி. கழகமும் கலந்து கொண்ட விறுவிறுப்பான ஆட்டத்தில் ஒரு கட்டத்தில் சென்.கென்றீஸ் அணி 2-1 என்ற வகையில் முன்னணியில் இருந்தது. இடைவேளையின் பின் மீள் குற்றம் புரிந்தவர் என்றவகையில் சென். நிக்கலஸ் வீரர் ஒருவர் மைதானத்தை விட்டு வெளியேற்றப்பட்டார். இதனைக் காரணமாகக் கொண்டு அவரும் இன்னும் இரண்டுவீரர்களும் நடுவரைத் தாக்கினார்கள். இதன் காரணமாக ஏற்பாட்டாளர்களால் சென். நிக்கலஸ் அணி சுற்றுப் போட்டியில் இருந்து நீக்கப்பட்டது.

கால் இறுதிப் போட்டிகளில் முதலாவதாக மயிலங்காடு ஞான முருகன் அணியும் அரியாலை ஐ. வி. கழகமும் மோதின. ஆட்டம் ஆரம்பித்து சில நிமிடங்களிலேயே றதீஸ்வரன் மைதானத்தில் நடுப்பகுதியில் இருந்து தனித்துக் கொண்டு போய் ஞானமுருகனுக்கு ஒரு கோலைப் பெற்றுக் கொடுத்தார். இது ரசிகர்களின் பெரும் ஆரவாரத்திற்குள்ளான சம்பவமாகும். இடைவேளைக்குச் சற்று முன் ஞானமுருகன் வி.க. ஒருபெனால்டியைப் பெற்றுக் கொண்டார்கள். அதனை அணித் தலைவர் சிறீதரன் (சிந்து) கோலாக்கினார். இதன் பின்னர் விளையாட்டு முடியும் வரை அரியாலை வி. க. தம் திறமையைக் காட்டி விளையாடியும் கோல் எதனையும் பெற்றுக் கொள்ள இயலவில்லை.

இரண்டாவது கால் இறுதியாட்டம் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகத்துக்கும், யாழ். பல்கலைக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்றது. இப் போட்டியில் இரண்டு அணிகளும் சளைக்காமல் இறுதி வரை தத்தம் திறமையைக்காட்டின. இருந்தும் இறுதி 5 நிமிடங்கள் இருக்கும் போது விநாயகர் அணியின் புஸ்பராசா நுட்பமாக பந்தைக் கம்பங்களினூடாகச் செலுத்த முயற்சிக்க, அதனைப் பல்கலைக்கழக கோல் காப்பு வீரர் தட்டிவிட்டார். ஆனால்; மீண்டும் ரஜீவன் அதனை லாவகமாக கோலாக்கினார். விநாயகர் வி: க. 1-0 என்றவாறு வெற்றி பெற்றது.

மூன்றாவது கால் இறுதியாட்டம் பாஷையூர் சென். அந்தனீஸ் வி. கழகத்திற்கும் காங்கேசன்துறை யங் றோயல் வி. கழகத்துக்கும் இடையில் நடைபெற்றது.

அந்தனீஸ் வி. கழக வீரர் ரஞ்சன் முதல் அரைப்பகுதியில் ஒரு கோல் போட்டார். இரு அணியினரும் சிறப்பாக விளையாடியபோதும் இந்த கோலைத்தவிர மேலதிக கோல் எதனையும் இருபகுதியாலும் போட இயலவில்லை

(4 ஆம் பக்கம் பார்க்க).

# ரசிகர்களைப் பரபரப்பில் ஆழ்த்திய 'டொனால்ட்' கிண்ண இறுதிப்போட்டி

## பல்கலைக்கழகம் வெற்றியைத் தட்டிப்பறித்தது

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பிரபல்யமான மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டிகளில் ஒன்றான டொனால்ட் கணேசகுமார் கிண்ணத்திற்கான சுற்றுப்போட்டி முடிவடைந்துள்ளது யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் சென்றலைட்ஸ் கழகமும் யாழ். பல்கலைக்கழகமும் ஒன்றையொன்று சந்தித்தன. 50 ஓவர்களைக் கொண்ட போட்டி என்பதால் இதற்கு ஒரு விசேட தன்மையுண்டு.

மோதிய இரண்டு அணிகளும் பலமிக்கவை. 50 ஓவர் போட்டிகளுக்குத் தகுதியானவை என்ற வகையில் ஒரு பரபரப்பான ஆட்டம் ரசிகர்களால்எதிர்பார்க்கப்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தவர்கள் யாழ் பல்கலைக்கழக அணியினர். இவ்வணியினர் ஆடஆரம்பித்து தம்மை நிலைநிறுத்தி ஆட ஆரம்பிப்பார்கள் என்று எதிர்பார்க்கும் போதே திலக் ஆட்டமிழந்து சென்றார். 6 ஓவரில் 26 ஓட்டங்களில் 1-ம் இலக்கு விழுந்தது. இதனைத் தொடர்ந்து சுதேசன் களத்தினுள் நுழைந்தார் பொதுவாக 50 ஓவர் ஆட்டங்கள விளையாட்டு வீரர்களின் பொறுமை, அவதானம், பொறுப்புணர்ச்சி என்பவற்றை வெளிப்படுத்துவதாக அமைவது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஆட்ட ஆரம்பத்திலே ராஜசேகர் ரண் அவுட் முறையில் ஆட்டமிழந்தார் இதன் பின்னர் இலக்குகள் மிக விரைவாகச் சரிய ஆரம்பித்தன. வந்த ஒழுங்கிலேயே வீரர்கள் திரும்பிச செல்ல ஆரம்பித்தனர். ஒன்பதாவது இலக்குச்சரிகையில் பல்கலைக்கழகம் 151 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்தது. அதே வேளை இன்னும் 10 ஓவர்கள் வீதம் இருந்தன. சுதேசன் மறுகரையில் ஒரு அரண் போல நின்று நிதானமாகப் பல்கலைக்கழக அணியின் ஓட்ட எண்ணிக்கையை வளர்த்தெடுத்துக் கொண்டு வந்தார். சுதேசன் ஆட்டமிழக்காமல் பெற்ற 93 ஓட்டங்களை விட்டால் ஏனைய வீரர்கள் அனைவரும் சேர்ந்து பெற்றுக்கொண்ட மொத்த ஓட்ட எண்ணிக்கை 80 மட்டுமே. பல்கலைக்கழக அணியின் இலக்கு இழப்புகளில் 4 இழப்புகள் ரன் அவுட் முறையில் அமைந்தமைகுறிப்பிடப்பட வேண்டும். இரண்டாவது இலக்காக ராஜசேகர் மற்றும் 8வது இலக்கு முதல் தொடர்ச்சியாக சிறிதரன் மதியழகன். டானியல் ஆகியோர் ரண் அவுட் முறையிலேயே ஆட்டமிழந்தனர். பின்வரிசை ஆட்டக்காரர் ஆட்டம் இழக்கும் போது குறைந்தது இன்னும் 15 ஓவர்களாவது மீதம் இருந்ததைக் குறிப்பிட வேண்டும். இந்த நிலையில் மிக நிதானமாக இவர்கள் ஓட்டங்களைச் சேகரித்திருக்க வேண்டும். இதை விடுத்து வீணாகத் தம் இலக்குகளைத் தாமே சரித்துக் கொண்டார்கள். ஏனைய வீரர்களும் தம்மை நிலை நிறுத்தி ஆட முனையாதது குறைபாடாகவே காணப்படுகின்றது, இப்படியான நிலையில் சுதேசன் வித்தியாசமாக மதிப்பிடப்பட வேண்டியவர். அவருக்குத் துணையாக இன்னொரு ஆட்டக்காரர் சோடி சேர்ந்திருந்தால் கூட மொத்த ஓட்டங்கள் 225க்கு மேல் சென்றிருக்கும். 9-வது இலக்கை இழந்து இறுதி 10 ஓவர்கள் நோபிள் சுரேந்திரனும், சுதேசனும் அழுத்தத்தின் மத்தியில் ஆட வேண்டி ஏற்பட்டிராது, தொடர்ந்தும் பல்கலைக்கழக அணியினர் சுழல் பந்து வீச்சாளருக்கு மேலதிக மரியாதையொன்றைக் கொடுத்து வருவது தெரிகிறது. ஆட்ட மத்தியில் பந்துவீச வந்த ரஜீவனும், 40-வது ஓவரின் பின் பந்து வீச வந்த சாந்திகரனும் ஓட்ட எண்ணிக்கையை பெரிதும் கட்டுப்படுத்தினார்கள். இவ்வகையில் 9|183 என்றவாறு பல்கலைக்கழக அணி தன் 50 ஓவர்களை நிறைவு செய்துகொண்டது.

சென்றலைட்ஸ் அணி தம் ஆட்டத்தை ஆரம்பித்த போது அதன் வெற்றி வாய்ப்பையிட்டு யாரும் சந்தேகம் கொள்ளவில்லை. இதற்கிணங்கவே அவர்களின் ஆரம்பமும் இருந்தது. ரஜீவனும், ஜீத்தும் இலகுவாகப் பந்து வீச்சாளர்களை எதிர்கொண்டார்கள், வேகமாக ரண்களைக் குவித்தார்கள் 1-ம் இலக்கு வரை 81 ஓட்டங்கள் பெற்றமை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் தம் கடமையை சரிவரச் செய்ததை எடுத்துக் காட்டுகிறது. இந்நிலையில் பல்கலைக்கழக முதற்தர பந்து வீச்சாளர் சிறிதரன் 15-வது ஓவரில் மீண்டும் அறிமுகப்படுத்தப்படுகின்றார். இவ்விறுதியாட்டத்தின் திசை திருப்பம் சிறிதரனின் இந்த அறிமுகம் எனலாம். ஜீத்தின் இலக்கை சிறிதரன் சரிக்க ரமேசின் இலக்கை சுதேசன் சரிக்க ரஜீவனின் இலக்கை சிறிதரன் சரிக்க இலக்குகள் மிக வேகமாகச் சரிய ஆரம்பிக்கின்றன. பல்கலைக்கழக அணிஒருபுதிய பாணியில் மிகவும் சிரத்தையுடன்ஆடஆரம்பித்ததுபோலத் தெரிந்தது 82 - 85 - 89 - 91 - 92 - 96 என்ற எண்ணிக்கையில் சென்றலைட்சின் முதல் ஆறு இலக்குகளும் சரிகின்றன 8வது இலக்குச் சரியும் போது ஓட்ட எண்ணிக்கை 12?; ஆட்டத்தில் சென்றலைட்ஸ் சார்பாக ஒரு திருப்பம் சுரேஸ் துடுப்பெடுத்தாடும் போது ஏற்பட்டது. அண்மைக் காலங்களில் சிறப்புற எண்ணிக்கை சேர்த்திராத சுரேஸ் சாந்திகரனுடன் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு அருமையாக ஓட்டங்களைச் சேகரிக்க ஆரம்பித்தார். சென்றலைட்ஸ் ஒரு நம்பிக்கை கொள்ளத் தொடங்கிய போது எதிர்பாராத முறையில் திலக்கின் பந்து வீச்சில் சிவசுதனிடம் பிடிகொடுத்து சாந்திகரன் ஆட்டமிழக்கவும் அதை தொடர்ந்து நரேஸ் சிலிப்ஸ், பகுதியில் வைத்து எடுத்த மிகவும் உயர் தரத்திலமைந்தபிடி சுரேஸை வெளியேற்றியது, பல்கலைக் கழகத்தை காப்பாற்றியது இதன்பின் ராஜசேகரும் மிகத் திறமையான பிடிஒன்றை எடுத்து அன்றாஜுட்டை வெளியேற்றினார் இந்நிலையில் சென்றலைட்ஸ் 9|147 என்ற நிலையில் இருந்தன: இவர்களால் இன்னும் 12ஓவர்கள் சமாளித்து வெற்றிக்கு 37 ஓட்டங்களைப் பெற இயலுமா என்றொரு வினா எழுந்தது. அரசரட்ணமும் பிரபாகரனும் ஜோடி சேர்ந்தபோது இருந்த நிலை இதுதான் பல்கலைக் கழகஅணியினர்மிகவும் உறுதியான மனோபாவத்துடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் சென்றலைட்சின் உறுதியானகொள்கையான இறுதிப் பந்து வரை போராடுவது என்பதற்கிணங்க அரசு, பிரபா இருவரும் அற்புதமாக ஆடத் தொடங்கினார்கள் இதேவேளைசென்றலைட்சின் இதே கொள்கையை புதிதாக வகுத்துக்கொண்ட அணியாக தம் பந்து வீச்சுபந்து பிடிப்பு போன்றவற்றில் வீச்சாக நின்ற பல்கலைக்கழக அணியினர்இவ்விறுதிநேரம் போட்டியைசவாலாகவேபெற்றுக்கொண்டனர் அரசு, பிரபா இருவரும் நிச்சயம் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள் இறுதியில் வந்து தன் அணியை முதன்மைக்கு கொண்டு வந்த சந்தர்ப்பம் பிரபாகரனுக்கு இதுதான் முதற்தடவையல்ல- அருமையானதொரு போட்டி ஆரம்பமாயிற்று, பல்கலைக் கழக அணியின் வெற்றிவாய்ப்பை மிக மெதுவாக், ஆனால் நிச்சயமாக அரசுவும் பிரபாவும் இல்லை எனும் நிலைக்குக் கொண்டு சென்று கொண்டிருந்தார்கள். பல்கலைக்கழக அணியின் தலைவர் விவேகானந்தனும் விட்டுக் கொடுப்பதாக இல்லை. சென்றலைட்சின் வெற்றிஎன்பது எட்டுப் பந்துகளில் 4 றண்கள் தொலைவில் நின்றது. இவ்வேளை நரேஸ் வீசிய 49-வது ஓவரின் 5-வது பந்து பிரபாகரனின் இலக்கைச்சரித்தது. அது மிக அற்புதமானதொரு வீச்சாகும். இரு அணியினதும் தளராத போராட்டம் முடிவுக்கு வந்தது. சென்றலைட்ஸ் 180 ஓட்டங்களுக்குத் தம் சகல இலக்குகளையும் இழந்தனர். டொனால்ட் கிண்ணத்தை பல்கலைக்கழக அணியினர் மூன்று ஓட்டங்களால் வென்றனர்.

சென்றலைட்சின் மத்திய வரிசை மீண்டும் சரிந்தது. இங்கு தெளிவாகத் தெரிகிறது. ரஜீவன், ஜீத் ஆகியோர் பெற்ற 47, 30 ஓட்டங்களும் அரசரட்ணம் பெற்ற 36ம் குறிப்பிடத்தக்கவை. பிரபாகரன் 13 ஓட்டங்கள் தான் பெற்றாலும் அவருடைய பணி வேறுவிதமாக அமைந்திருந்தது' பிரபாகரன், சுதேசன் போன்ற இளம் ஆட்ட வீரர்கள் பொறுப்புடன் சிறப்பாக விளையாடுகிறார்கள். இத் தன்மை இன்னும் பல்வேறு வீரர்கள் மத்தியில் வளர்ந்து வருதல் ஆரோக்கியமான கிரிக்கெட் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

நிர்மலன்



### டொனால்ட் கிண்ணம் '94 இறுதியாட்ட நாயகர்கள்

சிறந்த பந்துவீச்சாளர் :- ஆர். சிறீதரன் (பல்கலைக்கழகம்)

சிறந்த துடுப்பாட்ட வீரர் :- எஸ். சுதேசன் (பல்கலைக்கழகம்)

சிறந்த பந்துத்தடுப்பாளர் :- இ. ரகுதாஸ் (சென்றலைட்ஸ்)

சகலதுறை வீரர் :- பி. ரஜீவன் (சென்றலைட்ஸ்)

இறுதி ஆட்ட நாயகன் :- எஸ். சுதேசன் (பல்கலைக்கழகம்)

ஆட்டத் தொடர் நாயகன் :- எஸ். சுதேசன் (பல்கலைக்கழகம்)

6 பேர் கொண்ட கிரிக்கெட் போட்டி

## யாழ். பல்கலைக்கழகம் சம்பியனானது

அரியாலை சரஸ்வதி ச.ச. நிலையத்தால், 75 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடைபெற்ற 6 பேர், 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பல்கலைக்கழக அணி சாப்ரா அணியைத் தோற்கடித்து வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. இப்போட்டியில் பல்கலைக்கழக அணி 81 ஓட்டங்களை அதிரடியாகப் பெற்றுக் கொண்டது. இதில் எஸ், வரதன் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். பல்கலைக்கழகத்துக்கு பதிலளித்து ஆடிய சாப்ரா 13 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொள்ள முடிந்தது. 13 அணிகள் பங்கு கொண்ட இப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் பற்றீஷியன் அணி எதிர் சாப்ரா அணியும், பல்கலைக்கழக அணி எதிர் மானிப்பாய் பரீஸ் அணியும் மோதியமை குறிப்பிடத் தக்கது

### தங்க கிண்ணத்

யில் '94 உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணம் நான்காவது முறையாக பிரேசிலின் கைகளுக்குச் சென்றது. எல்லோருமே அழுதார்கள், வென்றவர் வெல்லாதவர் என்ற வேறுபாடின்றி. பரிசளிப்பு அடுத்த நிமிடமே ஆரம்பமாயிற்று. சில நிமிட நேரத்தில் பெரும் மகிமைக்குரிய அந்த வெற்றிக்கிண்ணம் பிரேசில் அணித் தலைவர் டுங்காவின் கரங்களில் தவழ்ந்தது இரண்டணி வீரர்களின் களைப்பு நீங்கு முன்னரே அவர்கள் பரிசளிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து உலகெங்குமுள்ள உதைபந்தாட்ட ரசிகர்களின் உணர்வலைகள் வேறு விதமாகத் திரும்பியிருக்கும். இந்த ஒரு மாதம் ஏன் இவ்வளவு விரைவாகப் போயிற்று என்று ஒரு சாரார் அங்கலாய்த்திருப்பார்கள். இப்படியொரு கோலாகல விளையாட்டுத் திருவிழாவிற்கு இன்னும் நான்கு ஆண்டுகள் காத்திருக்க வேண்டுமே என்று துயரப்பட்டிருப்பார்கள் இன்னொரு சாரார். ஏனெனில், இந்த ஒருமாதமும் உலகளாவிய உதைபந்தாட்ட ரசிகர்கள் ஐக்கிய அமெரிக்காவின் அந்த ஒன்பது விளையாட்டு மைதானங்களுடன் ஒன்றித்துப் போயிருந்தார்களோ. விளையாட்டுக்கள் கவர்ச்சிகரமானவை. மகிழ்ச்சியைத் தருபவை. ஆனால் உலக உதைபந்தாட்டப் போட்டிகள் போல ஒரே நேரத்தில் உலகை ஸ்தம்பிக்கச் செய்யவும், உயிர்ப்பிக்கவும் செய்யும் விளையாட்டு வேறெதுவும் இல்லை. இன்னும் நான்காண்டுகள்... அது விரைவாகவே போய் விடும்.

- நிர்மலன்

# லெப். இளங்கோ வெற்றி

இவ் வகையில் அந்தனீஸ் அரை இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது.

இளவாலை சென் கென்றீஸ் அணி ஊரெழு றோயல் அணி கலந்து கொண்ட ஆட்டம் இறுதிக்கால் இறுதிப் போட்டியாக அமைந்தது.

இவ்வாட்டம் ஆரம்பித்து சில நிமிடங்களிலேயே றோயல் வீரர் இருவர் நடுவரால் மைதானத்தில் இருந்து வெளியேற்றப்பட்டனர். 9 பேருடன் விளையாடிக்கொண்டிருந்த றோயல் அணிக்கு எதிராக பெனால்டி உதை ஒன்று வழங்கப்பட அதனை சென் கென்றீஸ் வீரர் கோலாக்கினார். மேலும் இன்னொரு கோலும் பெறப்பட்ட நிலையில் இடைவேளையின் போது 2 0 என்றவாறு சென் கென்றீஸ் முன்னணியில் திகழ்ந்தது.

இடைவேளையின் பின் றோயல் அணி மிகத்தீவிரமாக விளையாடியது 'வெள்ளை' என்று ரசிகர்களால் அன்புடன் அழைக்கப்படும் தர்மகுலசிங்கத்தின் விளையாட்டு அனைத்து ரசிகர்களாலும் ரசித்துப் பாராட்டப்பட்டது. போட்டி முடிவடையச் சில நிமிடங்கள் இருந்த வேளையில் தமக்குக்கிடைத்த நேருதை ஒன்றை அடித்தபோது அதனைக் கோல்காப்பு வீரர் தலைக்குமேலால் வைத்துப் பிடித்தார். இது கம்பங்களுக்குள் சென்று விட்டது என்று றோயல் அணியினர் வாதிட்டபோதும் நடுவர், உதவி நடுவர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை இதனால் றோயல் அணி சுற்றுப்போட்டியில் இருந்து விலகிக் கொள்ளவே சென் கென்றீஸ் அணி அரை இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது.

அரை இறுதி ஆட்டங்கள் ஆரம்பமாகியபோது, முதலாவது அரை இறுதியாட்டத்தில் ஞானமுருகன் வி. கழகத்தை எதிர்த்து அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் விளையாடியது. இவ்வாட்டத்தில் ஞானமுருகன் வி. கழகத்தின் இராசன் முதலாவது கோலைப் போட அணித் தலைவர் சிந்து இரண்டாவது கோலையும் போட்டார். விநாயகர் அணியின் திலகராஜ் ஒரு கோலைப் போட்டார். ஞான முருகன் வி. சழகம் 2 - 1 என்றவாறு இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

அடுத்த அரை இறுதியாட்டம் சென். கென்றீஸ் அணிச்கும், சென். அந்தனீஸ் அணிக்கும் இடையில் நடைபெற்றது. அந்தனீஸ் அணி தனக்குக் கிடைத்த மூலை உதையொன்றை அழகாகக் கோலாக்கியது. எல்ட்டன் அடித்த பந்து ரஞசனால் தலையால் அடிக்கப்பட்டு கோலாகியது இந் நிலையில் சென். கென்றீஸ் வீரர் ஜெயகுமார் பந்தை மின்னல் வேகத்தில் எடுத்துச் சென்று கோலாக்கினார். மீண்டும் நேசன் இன்னொரு கோலையும் சென். கென்றீஸ் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தார். சென். அந்தனீஸ் அணியின் றோய், கெலின் ஆகியோர் திறமையாக விளையாடினார்கள். இருந்தும் சென். கென்றீஸ் 2 - 1 என்ற கோல் கணக்கில் இறுதியாட்டத்திற்குத் தெரிவாயிற்று.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் பாஷையூர் அந்தனீஸ் வி. கழகம் அளவெட்டி விநாயகர் வி. கழகத்தைத் தோற்கடித்தது. செபனேசன், ரஞ்சன் ஆகியோர் வெற்றி பெற்ற அணிக்கான கோல்களைப் போட்டு 2 - 0 என்ற வகையில் ஆட்டத்தை முடித்துக் கொண்டனர்.

இறுதியாட்டம் ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்துக்கும், சென் கென்றீஸ் வி. சழகத்துக்கும் இடையில் நடைபெற்றது. இவ்வாட்டத்தைக் காண பெரும் திரளான மக்கள் கூடியிருந்தார்கள். போட்டி ஆரம்பித்துச் சில நிமிடங்களில் சென். கென்றீஸ் இடது கரை வீரர் டொமினிக் பந்தை கோல் பரப்பினுள் உயர அடித்தார். இதனை ஞானமுருகன் கோல் காப்பு வீரர் பிடிக்க முற்பட அதேவேளை அதேஅணியின் பின் காப்பு வீரர் தலையால் செலுத்த முற்பட்டார். இருவரும் மோதிக்கொள்ளவே பந்து இவர்களில் பட்டுத்தெறித்தது. சந்தர்ப்பம் பார்த்திருந்த ஜெயக்குமார் சாதுரியமாக அதனைக் கோலாக்கி சென். கென்றீஸ் அணியை 1 - 0 என்ற நிலைக்குக் கொண்டுவந்தார். இடைவேளை வரை ஞானமுருகன்வீரர்கள்- சிறப்பாக ரதீஸ்வரன்-நிறைய அழுத்தம் கொடுத்தும் திறமையான சென். கென்றீஸ் கோல் காப்பு வீரரைத் தாண்டி கோல் போட இயலவில்லை.

இடைவேளையின் பின் ஞான முருகன் அணித் தலைவர் சிறீதரன் (சிந்து) அற்புதமாக ஆடினார். இவர் ரசிகர்களால் பெரிதும் கவரப்பட்டார். மீண்டும் சென் கென்றீஸ் கோல் காப்பு வீரரும், பாதுகாப்பு வீரன் றொமியும் பெரும் அரணாக இருந்து ஞான முருகன் அணிக்கு பெருத்த சோதனையைக் கொடுத்தார்கள். மறுபுறம் சென், கென்றீஸ் வீரர்கள் ஜெயக்குமார், டொமினிக், நேசன், ஆகியோர் எப்படியும் இன்னொரு கோல் பெறுவதென்று கங்கணம் கட்டி நின்றும், ஞானமுருகன் பின் காப்பு வீரர்கள் அவர்களின் முயற்சிகள் அனைத்தையும் வியர்த்தமாக்கினர். இறுதியில் 1-0 என்ற கோல் கணக்கில்வென்று லெப். இளங்கோ ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தைத் தமதாக்கும் பெருமையைப் பெற்றார்கள். போட்டித்தொடரின் சிறந்த வீரருக்கான பரிசு றோயல் அணியின் தர்மகுலசிங்கத்துக்கும் (வெள்ளை) சிறந்த கோல் காப்பு வீரருக்கான பரிசு யங்கென்றீஸ் அணியின் கோல் காப்பு வீரர் யோக்கர் அன்ரனிக்கும் போட்டித் தொடரின் சிறந்த அணிக்கான பரிசு யாழ் பல்கலைக்கழக அணிக்கும் வழங்கப்பட்டது.


## ஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்டம்

## முக்கிய அறிவித்தல்

யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனத்தின் 7-வது ஆண்டு நிறைவுவிழாவினன்று [22. 07. 94] விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறும் வீரர்கள் அனைவரையும் [22. 07. 94] வெள்ளிக்கிழமை காலை 7. 30 மணிக்கு எமது ஸ்தாபனத்திற்கு தவறாது சமுகம் கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்டம்.
நிர்வாகக் குழு.

(சி-1955)



பழைய மாணவர் சங்கம் நடாத்தும்
யாழ்.மத்திய கல்லூரியின்
175-வது
ஆண்டு நிறைவு விழா

## கிரிக்கற் சுற்றுப்போட்டி

காலம் :- யூலை 29, 30
இறுதிப் போட்டி :- 01-08-1994 திங்கட்கிழமை
மாலை 4 மணி
இடம் :- யாழ். மத்திய கல்லூரி மைதானம்

ஆறுபேர் கொண்ட அணியாக பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் "செயலாளர், சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம், யாழ். மத்திய கல்லூரி" யுடன் தொடர்பு கொள்ளவும்.

போட்டிகளில் பங்குகொள்ளும் அனைத்து வீரர்களுக்கும் யா. ம. க. 175-வது ஆண்டு நிறைவு சான்றிதழ்களும், வெற்றி பெறும் முதலாம் அணிவீரர்களுக்கு கிண்ணங்களும், முதலாம் இரண்டாம் அணிகளுக்கு வெற்றிக் கேடயங்களும் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி : 25-07-1994

இறுதிப் போட்டி நிகழ்ச்சி

தலைவர்: டாக்டர் எஸ். பி. ஆர். சிர்மாறன் (தலைவர் ப.மா. ச.)
பிரதம விருந்தினர்: டாக்டர் எஸ். குகதாசன் (கண்சிகிச்சை நிபுணர், யாழ் போதனா வைத்தியசாலை)
சிறப்பு விருந்தினர்கள்:
திரு. என். கே. சண்முகநாதபிள்ளை (அதிபர், காப்பாளர்)
திரு. கா. மாணிக்கவாசகர் (உப -காப்பாளர், அரசஅதிபர்)
கலாநிதி என். எதிர்வீரசிங்கம் (உப காப்பாளர்)
லயன் எஸ். இராமகிருஷ்ணன் (உப-காப்பாளர்)
பரிசளிப்பு: திருமதி குகதாசன்
நன்றியுரை: திரு. எஸ். பிரேம்குமார் (செயலாளர், சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

51, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

என். இராஜதேவன்
செயலாளர்

அன்பளிப்பு:
பலகலைகளிலும் சிறப்புற்று தமிழீழத்தில் இமயமலை போன்று நாட்டுக்கும் மக்களுக்கும் பெருமை தேடித்தர வாழ்த்துகின்றோம்.
"ரெட்னா பலசரக்கு மாளிகை"
718, மருத்துவமனை வீதி யாழ்ப்பாணம்
பால்மா வகைகள், பாவனைப் பொருட்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள
(சி-9954) "ரெட்னா பலசரக்கு மாளிகை"

நல்லூர் ... நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு..

ரோமாபுரி ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகிய என்னை மொழியின் இலக்கணம் கட்டுப்படுத்தாது.

- சக்கரவர்த்தி ஸிகிஸ் மண்ட்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 20-07-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## ஐ.தே.கவின் நாடகம் அரங்கேறி வருகிறது

யாழ். மாவட்டத்தில் தேர்தல் நடத்துவதென ஐ.தே.கட்சி அரசாங்கம் எதற்காக திட்டமிட்டதோ அது குறித்துப் படிப்படியாக முன்னேறி வருகின்றது. இந் நிலையில், யாழ். தேர்தல் மாவட்டத்திற்குரிய 10 தொகுதிகளிலும் இருந்து ஐ. தே. கவிற்குச் சார்பானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு தடையாகவுள்ள அம்சங்களையும் நீக்குவதில் அது அக்கறையாகச் செயற்படுகின்றது,

இந்த வகையிலேயே யாழ் மாவட்டத்தில் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை இல்லை என்ற கூட்டணி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேட்பு மனு நிராகரிக்கப்பட்டதைக் கொள்ள வேண்டும். யாழ். மாவட்டத்தில் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை இல்லை எனத் தாக்கல்செய்யப்பட்ட இம்மனுவிற்கு தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், தேர்தலை நிறுத்த முடியாது எனவும் காரணம் கூறியது.

இதைத் தொடர்ந்து இவ்விவகாரத்தை உயர் நீதிமன்றத்திற்கு கூட்டணி கொண்டு சென்ற போது அங்கும் அது நிராகரிக்கப்பட்டது. ஆனால் உயர் நீதிமன்றம், வேட்பு மனுவை நிராகரித்ததை விட முக்கியமான விடயம் நிராகரித்ததற்கான காரணத்தை பின்னர் வெளியிடுவதாக நீதிமன்றம் கூறியதாகும்.

நீதிமன்றத்தின் இந் நிலைப்பாடானது ஒரு வகையில் வேடிக்கையானது என்றே கொள்ள வேண்டும், இது ஒருவகையில் நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் குறித்தே கேள்வி எழுப்புவதற்கு ஏதுவாகின்றது, ஏனெனில் காரணம் கூறாமல் தீர்ப்பு எவ்வாறு கூற முடியும்? அவ்வாறு இல்லாது போனால் நீதிபதி தனது தீர்ப்புக் கூறாது வேறு யாருடையதோ தீர்ப்பைக் கூறினரா? என்றே சந்தேகிக்க வைக்கும். இந்நிலையில் இத் தேர்தல் ஆட்சேபனை நிராகரிப்பில் ஐ தே.க அரசாங்கத்தின் பங்களிப்பு எந்தளவிற்கு உள்ளது, என்பது நிராகரிக்கப்பட முடியாத ஒரு கேள்வியாகும்.

## வடக்கு-கிழக்கு பிரச்சினையில் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு

### -தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

''வடக்கு - கிழக்கு பிரச்சினையில் அரசாங்கத்திற்கு எனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக உறுதிமொழி வழங்கியே நான் அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ளேன்.'' இவ்வாறு இ.தொ.கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் கூறியுள்ளார்.

'லங்காதீப' பத்திரிகைக்கு பேட்டியளித்த அவரிடம் வடக்கு- கிழக்கு பிரச்சினைக்கு இந்த அரசாங்கம் ஆட்சி அமைத்தால் தீர்வு ஏற்படும் என எதிர்பார்க்கிறீர்களா? எனக் கேட்கப்பட்டபோது பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தால் மட்டுமே தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கப்போவதாகவும் தெரிவித்தார்.

கடந்த ஆட்சிக் காலத்தின் போதும் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு பல கோரிக்கைகளை நிறைவேற்றியதாக கூறியுள்ளீர்கள். அப்படியானால் மீண்டும் பேச்சு நடத்தி என்ன உரிமைகளைப் பெற முயற்சி மேற்கொள்வீர்கள்? எனக் கேட்கப்பட்டபோது வடக்கு- கிழக்கு பிரச்சினையைத் தீர்த்து அங்கு சமாதானம் ஏற்படுத்துதலே முக்கிய விடயமாக இருக்கும். அதே வேளை தோட்டத் தொழிலாளர் நில உரிமையாளர்களாக மாறும் நிலை ஏற்படவும், காணி, வீடமைப்பு மற்றும் மருத்துவ வசதி போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளவும் பாடுபடப்போவதாக தெரிவித்தார்.

இப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். இதன் அடிப்படையிலேயே நாம் பூரண ஒத்துழைப்பை அரசாங்கத்திற்கு வழங்க முன்வந்துள்ளோம் எனவும் குறிப்பிட்டார்.

## முரண்பாட்டை தூண்டும் பிரசாரம் செய்ய வேண்டாம்

### - தமிழ் அரசியல்வாதிகளிடம் கோரிக்கை

(கொழும்பு)

இன அடிப்படையிலான முரண்பாடுகளைத் தூண்டும் வகையிலான தமிழ் அரசியல் வாதிகளின் பிரசாரத்தால் தமிழர்கள் கௌரவமாகவும், சமத்துவத்துடனும் வாழ்வதில் சிக்கல்கள் ஏற்படலாம் என்று இந்துப் பேரவை தமிழ் அரசியல் வாதிகளுக்கு எச்சரிக்கைவிடுத்துள்ளது தமிழர்கள், தமிழர் அல்லாதகட்சிகளுக்கு வாக்களிக்கக் கூடாது என்று கொழும்பில் மேற்கொள்ளப்படும் பிரசாரம் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இந்துப் பேரவை தமது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது: தனிப்பட்டவர்களின் நலன்கள் அல்லது கட்சிகளின் நலன்கள் என்பது சிறுபான்மையினரதும், நாட்டினதும் நலன்களை அடிப்படையாகக் கொண்டே அமைய வேண்டும் எனவும், சுட்டிக்காட்டியுள்ளது

## எதிரணி ஆதரவாளரின்

## மரணச் சடங்கில் வைத்து இறந்தவர் மனைவி கைது

(கொழும்பு)

வேட்பாளர் நியமனப் பத்திரம் தாக்கல் செய்த தினத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணம் அடைந்தவரின் மரணச் சடங்கின் போது அங்கு வந்த பொலிசார் அவரின் மனைவி மற்றும் உறுப்பினர்களை கைது செய்து அடுத்த நாள் விடுதலை செய்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனேத்திர பியாங்கனி அபேவீர தெரிவித்துள்ளார்.

களுத்துறைப் பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் மரணம் அடைந்த ஆர். குணதிலக்காவின் உடல் நல்லடக்கம் செய்வதற்கு குழி வெட்டும்போது அம்மயானத்திற்கு வந்த பொலிசாரே இவ்வாறு நடவடிக்கையில் ஈடுபட்டனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பிரெஞ் போர்க்கப்பல் கொழும்பில் தரிப்பு

(கொழும்பு)

பிரெஞ் போர்க் கப்பலான ஜுலியஸ்வேர்ன் கடந்த 11 ஆம் திகதி முதல் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்று ... உதவும்பொருட்டு இக்கப்பல் வந்துள்ளதாககூறப்படுகிறது. இக்கப்பலில் அனைத்து கடற்படை உபகரணங்களையும் பழுது பார்க்கக்கூடிய கருவி

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கடந்த 15ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் கீழ்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இரண்டாந்தர நூல்நிலையப் பொறுப்பாளர், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைச் சபையின் கல்வி அமைச்சில் முகாமைத்துவச் சேவை அதிகாரிகள் பதவிகள், கல்வியமைச்சில் நிகழ்ச்சியமைப்பாளர், தொகுதிப்பகுப்பாய்வாளர் முதலாந்தர, இரண்டாந்தர பதவிகள் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களும்,

அரசாங்க மாகாண அரசாங்க சேவையின் கணக்குப் பதிவாளர் சேவையின் வகுப்பு இரண்டு பிரிவு ''அ'' உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை - 94 செப்டம்பருக்கான விண்ணப்பங்களும் மேற்படி திகதிய வர்த்தமானியில் கோரப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை ஈழநாதம் பணிமனையில் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

## தற்கொலை

(யாழ்ப்பாணம்)

வாழ்வில் விரக்தியுற்ற இளம் குடும்பப் பெண்ணொருவர் நஞ்சருந்தி தற்கொலை ...

## புள்ளிவிபரம் திரட்டுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்டது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் புள்ளி விபரக் கிளையினால் 94 ம் ஆண்டுக்கான புள்ளிவிபரத் தகவல்களைத் திரட்டும் பொருட்டு தகவல் சேகரிப்பாளருக்கான பயிற்சி வகுப்பு கடந்த மாதம் 28 ம் திகதி பெருநிலப்பரப்பில் நடாத்தப்பட்டது.

இவர்களால் இவ்வாண்டிற்கான கால்நடை, வளர்ப்புப் பறவைகள் புள்ளிவிபரம், விவசாய உபகரணங்கள் விபரம், பயனுள்ள மரங்கள் விபரம், கடற்தொழில் சார்ந்த விபரம் போன்ற பல பயனுள்ள தகவல்கள் திரட்டப்படஉள்ளன.

இதன் மூலம் பெறப்படும் தகவல்களை ஆதாரமாகக் கொண்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், விவசாயம், விலங்கு வேளாண்மை, கடல் வளம் போன்ற நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதான திட்டங்களை வகுத்து பெருநிலப்பரப்பில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது.

## ஜனாதிபதி தேர்தலில்

## சிறிமா போட்டியிட்டாலும் ஆதரவு வழங்குவோம்

### -மு.கா.தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் சிறிமா பண்டாரநாயக்கா போட்டியிட்டாலும் நாம் ஆதரவு வழங்குவோம் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சில சக்திகள் கூறுவது போல், சிறிமா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் நாம் ஆதரவு வழங்கமாட்டோம் எனக்கூறுவது விஷமப் பிரசாரமாகும். சந்திரிகாவுடன் உடன்பாடு பற்றி இச்சக்திகள் இதேவாறான பிரசாரங்களை மேற்கொண்டிருந்தன எனவும் அவர் கூறினார்.

## துப்பாக்கிச் சூடு நடத்திய இரு பொலிசார் கைது

(கொழும்பு)

கட்சிகளுக்கு இடையிலான கலவரத்தின் போது அதனை நிறுத்துவதற்கு சமாதான பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற வேளையில் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்ட இரு பொலிசார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட தினத்தன்று தங்காலையில் பொதுசன ஐக்கிய முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும், இடையே சிறு வாக்குவாதம் இடம் பெற்றது. இவ் வாக்குவாதத்தை தீர்த்து வைக்கும் முகமாக கட்சிப் பிரமுகர்கள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டனர். ஆனால் அச் சமயத்தில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் அதில் இருவர் கொல்லப்பட்டதும் தெரிந்ததே.

இத் துப்பாக்கிச் சூட்டை நடத்திய பொலிசார் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்கள் மீதான விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

## பாதுகாப்பு பலமாகும் ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படும் என்று சிறிலங்கா ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா உறுதியளித்துள்ளார்.

கடந்த வார இறுதியில் மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் சங்கைக்குரிய மகாநாயக்க ... ஜனாதிபதி இந்த உறுதிமொழியை வழங்கினார்.

தேர்தல் காலத்தில் நாட்டில் குழப்பங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை முற்றாகத் தடுப்பதற்கு அரசு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தயாரித்திருப்பதாக ஜனாதிபதி ...

கத்தின் பங்குளந்தளவிற்கு உள்ளது, என்பது நிராகரிக்கப்பட முடியாத ஒரு கேள்வியாகும்.

அடுந்ததாக யாழ் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்த ஈ,பி, ஆர்.எல்.எப். வினர் பிராசாரம் செய்ய ஈ.பி.டி.பி. விதித்துள்ள தடையும் அச்சுறுத்தலுமாகும். சிறிலங்கா இராணுவத்துடன் முழுமையாக இணைந்து செயற்படும் ஈ.பி.டி,பி, தீவுப்பகுதியில். ஈ.பி.ஆர் எல். எப். போ அன்றி வேறு எவருமோ தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதற்கு தடைவிதித்துள்ளது இதற்கு அரசாங்கத்தின் பூரண ஆதரவும் உண்டு. ஏனெனில் ஐ-தே-க- அரசாங்கத்தில் முழுமையாகத் தங்கியுள்ள ஈ.பி.டி, பி தேர்தலில் வெற்றி பெறுமானால் அது ஐ தே-கவிற்கு கிடைத்த வெற்றியே ஆகும்- இதன் மூலம் ஐ. தே- க. பெருந்நன்மையும் அடையக் கூடும்.

இதேசமயம் ஈ.பி.ஆர்.எல்.எப். போ அன்றி கூட்டணியோ வெற்றி பெறுவதை அரசாங்கம் விரும்பவில்லை, சிலவேளை அவர்கள் எதிரணியினருடன் சேர்ந்து விடுவார்களோ என்ற அச்சமே இதற்கான காரணமாகும்- இந் நிலையிலேயே ஈ.பி,ஆர்,எல்,எப்,பினர் தீவுப் பகுதியில் உள்ள ஈ.பி டி பியினரின் ஆயுதங்களை களையுமாறுவிடுத்தகோரிக்கையை சிறிலங்கா அரசு நிராகரித்துவிட்டது.

இந்நிலையானது அரசாங்கத்தின் குறிக்கோள்களைத் தெளிவாகவே காட்டுகின்றது. நீதிமன்றம் காரணம் கூறாமல் வழக்கை நிராகரிப்பதும், தேர்தலில் போட்டியிடும் குழுவின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரிப்பதும் இதன் வெளிப்பாடே ஆகும்.

ஆனால், இவ்விவகாரத்தை இப்பகுதியில் குறிப்பிடுவதென்பது, ஈ.பி.ஆர்.எல்.எவ்.போ அன்றி தமிழர் விடுதலைக் கூட்டணியினரதோ நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளக் கூடியதோ, அன்றி வரவேற்கத்தக்கது என்பதற்காகவல்ல. ஏனெனில், இத்தேர்தலில் பங்கு பற்றுவதன் மூலம், இவர்கள் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைப்பதுடன், தேர்தல் என்ற போர்வையில் அழிந்து போய்விட்ட தமது அரசியல் வாழ்விற்குப் புத்துயிர் கொடுக்கும் முயற்சியுமாகும்.

ஆகையினால், இங்கு சுட்டிக்காட்ட முனைவது ஐ. தே.க அரசாங்கம் தனது அரசின் குறிக்கோளை எவ்வாறு அடைய முனைகின்றது என்பதே ஆகும். இந்நிலையில், தேர்தலில் பங்குபற்றுபவர்கள் யாராக இருப்பினும் சரி, அவர்கள் ஒரு வகையில் ஐ தே.கவின் அரசியல் நாடகத்திற்கு ஒத்துழைக்கின்றார்கள் அல்லது தமிழினத்தைக் காட்டிக் கொடுக்கின்றார்கள் என்பதே உண்மையாகும்.

---

ஆம் திகதி முதல் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்று விட்டு இவ்வார இறுதியில் அங்கிருந்து புறப்பட்டுள்ளது

இந்து சமுத்திரத்தில் உள்ள பிரெஞ் கடற்படைகளுக்கு

படை உபகரணங்களையும் பழுது பார்க்கக்கூடிய கருவிகளும் பொறியியலாளர்களும் உள்ளனர் எனக் கூறப்படுகிறது. இக் கப்பலில் 300 பேர் பணியாற்றுகின்றார்கள்.

# ஐ. தே.க வேட்பாளர்களுக்கு தலதாவில் ஆசிர்வாதம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்கள் அனைவரும் கண்டி தலதா மாளிகைக்குச் சென்று ஆசி பெற்றுக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது, கண்டியில் தமது முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை ஆரம்பிக்க முன்னர் இவர்கள் தலதா மாளிகைக்கு சென்றனர்.

ஜனாதிபதி டி. பி.விஜேதுங்காவின் தலைமையில் சென்ற இவர்களுக்கு தலதாமாளிகை பிரதமகுரு ஆசி வழங்கியுள்ளதாக தெரியவருகிறது.

# ஏறாவூரில்,படை வாகனம் விபத்தில் சிக்கியது

## லெப்டினன்ட் உட்பட நால்வர் பலி

(மட்டக்களப்பு)

இராணுவ தண்ணீர் பௌசர் ஒன்று பாதையை விட்டு விலகி தடம் புரண்டதால் இராணுவ லெப்டினன்ட் ஒருவர் உட்பட நாலு இராணுவ வீரர்கள் பலியாகினர். இவ் விபத்து கடந்த வாரம் ஏறாவூர் பொலிஸ் பகுதியிலிருந்து 15 மைலுக்கு அப்பால் இடம் பெற்றது

செங்கலடி முகாமைச் சேர்ந்த இராணுவ லெப்டினன்டும், ஏறாவூர், செங்கலடி, மரப்பாலம் ஆகிய முகாம்களைச் சேர்ந்த மூன்று இராணுவ வீரர்களுமே இவ் விபத்தில் பலியானவர்கள் ஆவர்.

---

தோலகட்டி பிடிக்கப்பட்டுள்ளது. தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினாலும் மற்றும் சுகாதார திணைக்களங்களினாலும் சக்கரீன் பாவனை தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் மென்பானங்கள், குளிர் பானங்கள், போன்ற உணவுத் தேவைகளிற்கு பாவிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. என்று தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஏற்கனவே கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களையும் உதாசீனம் செய்து மக்களின் நலன்களைப்பற்றிப்போதியளவு கவனம் எடுக்காத இந்த நிறுவனத்தின் உற்பத்தி உடனடியாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது.

மேற்படி தரமற்ற உற்பத்திகளை கையிருப்பில் வைத்திருப்போர் இவற்றை சந்தைப்படுத்துவதை நிறுத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பானங்களுக்கான தமிழீழ தரக் கட்டுப்பாடுகளை கைக்கொள்ளும்வரை இவ்வாறான தடைகள் மக்களின் நலனை முன்நிறுத்தி நடைமுறைப் படுத்தப்படும்.

பொதுமக்கள் இவ்வாறான உற்பத்திகள் குறித்து எச்சரிக்கையாக இருக்கும்படியும் சந்தேகம் ஏற்படக்கூடிய உற்பத்திப் பொருள்கள் சந்தையில் இருக்கும் சந்தர்ப்பங்களில் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்திற்கு தகவல் தரும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

---

ருவர் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார். கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் வசித்து வந்த, புங்குடுதீவு, 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த சு. வசந்தராணி (வசந்தி- வயது 20) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்தவராவார் கடந்தநான்கு மாதங்களுக்கு முன்னர்தான் இவர் திருமணம் செய்து கொண்டார் எனவும், உயிரை மாய்த்துக் கொள்ளும் அளவிற்கு மனவிரக்தி அடைய என்ன நேர்ந்தது என்பது பற்றி தம்மால் அறிய முடியவில்லை எனவும் இப் பெண்ணின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

(22)

## புதிய தபால் பெட்டி

யாழ்- சேர் பொன்.இராமநாதன் வீதி - பிறவுண் வீதி, சந்திக்கும், கலட்டிச்சந்தி ஐயப்பசுவாமி கோவிலுக்கு அருகில் யாழ்ப்பாணப் பிரதம அஞ்சல் அதிபர் திரு எஸ். கோடீஸ்வரன் அவர்களால் பொது மக்கள் நன்மைகருதி தபால்பெட்டி ஒன்று அண்மையில் நிறுவப்பட்டுள்ளது.

(24)

## கொடுப்பனவுகள் வழங்கப்படுகிறது

(குருநகர்)

ஊர்காவற்றுறை பிரதேசச் செயலர் பிரிவால் வழங்கப்படும் ஆனி மாதத்திற்கு உரிய பொது சன மாதாந்த உதவிப் பணம் மற்றும் தொழுநோய், புற்றுநோய், காசநோய் ஆகிய நோயாளர்களுக்கான உதவிப் பணமும் தற்பொழுது சுழிபுரம் தபாலகத்திலுள்ள காரைநகர் கிளை அஞ்சலகத்திலும், யாழ்ப்பாண தபாலகத்திலுள்ள ஊர்காவற்றுறை கிளையிலும், கைதடி அஞ்சலகத்திலும் விடத்தல்பளை வண்ணார்பண்ணை உப அஞ்சலகங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது.

(21)

---

சங்கைக்குரிய மகாநாயக்க தேரர்களைச்சந்தித்தபோதே

தயாரித்திருப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

# அம்புலன்ஸ் தினம் கொண்டாடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பிரதேச சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சங்கமும், படையும் சர்வதேச சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தின.

இதனை முன்னிட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக மைதானத்தில் அணிநடைப்போட்டியும் கைலாசபதிகலையரங்கில் சிறப்பு நிகழ்ச்சிகளும் கடந்த பத்தாம் திகதி நடாத்தப்பட்டது. டாக்டர் எஸ் பி. ஆர். சீர்மாறன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில், பிரதம விருந்தினர்களாக வைத்திய கலாநிதி எம். கணேசரத்தினமும் பாரியாரும் கலந்து கொண்டனர். தேசியக் கொடியை தமிழீழவிடுதலைப் புலிகள் மகளிர் அணி பொறுப்பாளர் ரதிஏற்றிவைத்தார்.

விநாடி வினா போட்டியில் திருக்குடும்ப கன்னியர் மட மாணவிகளும் தாதியர் பிரிவு அணிநடைப்போட்டியில் பெரியபுலம், மகாவித்தியாலயமும். ஆண்களுக்கான அணிநடைப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியும், முதலுதவி செய்முறைப் போட்டியில் யாழ் இந்து மகளிர் கல்லூரியும் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டன.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994-07-20 புதன் இரவு

08.01- குயிலோசை- ''களத்தில் காத்தான்'' சிந்து நடைக் கூத்து -அங்கம் 2

08.20- ஏர் முனை- ''சத்தான குரக்கனும் எங்கள் சொத்தான ஒடியலும்'' -குறு நாடகம்

08.30- செய்திகள்

08.40- நாடகம்-''சாவின் பெறுமதி''

### 1994 07-21 வியாழன் காலை

07.02- மாவீரவணக்கம்

07.15- விடுதலைக் கீதங்கள்

07.30- செய்திகள்

07.35- பத்திரிகைச் செய்திகள்

07.40-விடுதலைக்கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## பிரம்பு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண குடாநாட்டில் பிரம்புப் பொருட்கள் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களின் நன்மைகருதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கைத்தொழில் பகுதியினர் பிரம்பினை விநியோகித்து வருகின்றனர்.

பிரம்பினை பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபடுவோர் தமக்குத் தேவையான பிரம்பினைப் பெறவிரும்பின் தாவடியிலுள்ள கைத்தொழில் பகுதி அலுவலகத்தில் அல்லது, ஆரியகுளம் சந்தியிலுள்ள வானவில் குளிர்பான நிலையத்தில் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது.

# தமிழீழ நிர்வாக சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது ஏன்?

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் விளக்கம்

தமிழீழ நிர்வாக சேவை இன்று உதயமாகி இருக்கின்றது இந்தசேவை ஏன் தோற்றுவிக்கப்பட்டது, இதன் அடிப்படையான இலக்குகள், குறிக்கோள்கள் என்ன? எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் இந்த அமைப்பின் பங்கு என்ன? என்பதைப் பற்றி சிறிது விளக்கமாக எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இவ்வாறு நேற்று யாழ் நகரில் இடபெற்ற தமிழீழ நிர்வாக சேவை ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்

அவர் தொடர்ந்து கூறுகையில்;

விடுதலைப் புலிகள் இயக்கம், பல்வேறு சட்டைப்புகளை, உருவாக்கி வருகின்றது சட்டம், ஒழுங்கு நீதி நிர்வாகம், சிவில் நிர்வாகம் மற்றும் பல்வேறு துறைகளில பல்வேறு சட்டமைப்புகளை உருவாக்கி செயற்படுத்தி வருகின்றது. இதன் நோக்கம் என்ன? இதன் குறிககோள்கள் என்ன என்பது பற்றி எமது மக்கள் தெரிந்து வைத்திருக்கவேண்டியது அவசியம் எமது போராட்டம் இரண்டு பரிமாணங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. ஒன்று எமது மண்ணை படிப்படியாக மீட்டெடுப்பது அடுத்தது மீட்டெடுத்த பிரதேசத்தில் எமது ஆட்சியமைப்பை படிப்படியாக அமைத்து வருவது.

### திட்டமிட்ட போர்முறைத் திட்டம்

ஆயுதப் போராட்டத்தின் நோக்கம் என்ன? தமிழீழம்தான் எமது இயக்கத்தின் இலட்சியம் ஆனால் தமிழீழத்தை அடைவது எப்படி? அனேகமான மக்களுக்கு தமிழீழம் என்பது பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது இது சாத்தியமா? உலக நாடுகளின் ஆதரவு இருக்கிறதா?, இந்தியாவின் ஆதரவு இருக்கிறதா? எவ்வளவு காலம் இந்தப் போராட்டம் நடக்கப்போகிறது? இதற்கு ஒரு முடிவில்லையா? இப்படியான கேள்விகள் எமது மக்கள் மனதில் எழுகிறது இது எமக்குத் தெரியும் எமது இயக்கம் ஒரு திட்டமிட்ட முறையில், ஒரு விரிவான, போர் முறைத் [illegible]

மீட்டெடுக்கப்பட்ட பிரதேசங்களில், எமது ஆட்சியமைப்பை கட்டியமைக்கவேண்டும். இந்த இரண்டு நோக்கங்களில் எமது போராட்டம் நகர்ந்து செல்கின்றது தமிழீழ பகுதிகள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த பொழுது சிங்கள அரச நிர்வாகத்தின் பல அலகுகள் சீர்குலைந்து போயிருந்தன. உதாரணமாக காவல்துறை, நீதி நிர்வாகத்துறை, இப்படியான முக்கியமான அலகுகள் சீர்குலைந்து சிதைந்து போயிருந்தன இவற்றை நாம் மீளக் கட்டியமைக்கும் நோக்கில் தான் காவல்துறை நீதி நிர்வாகம் போன்ற அமைப்புக்களை உருவாக்கினோம் அப்படியான நிர்வாக அமைப்புக்கள், அமைக்கப்படாத பட்சத்தில் மீட்கப்பட்ட பிரதேசத்தில், சட்டம் ஒழுங்கு இருந்திராது சமுக சீர்கேடும் அராஜகமும் ஏற்பட்டிருக்கும்.

### வெகு சன அமைப்புக்களால் நிர்வகிக்க முனைந்தோம்

ஆரம்பத்தில். எமது நிர்வாக கட்டமைப்பை, வெகுசன அமைப்புகள் மூலம் நிர்வகிக்க முடிவு செய்திருந்தோம். இதன் அடிப்படையில் தான் ஒரு சில வருடங்களுக்கு முன்பு விடுதலைப் புலிகள் மக்கள முன்னணி என்றொரு கட்சியமைப்பு உருவாக்கப்பட்டது அந்த கட்சியமைப்பின் கீழ் பல நிர்வாக அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. அதாவது வெகுசன அமைப்புக்கள் மூலம் சிவில் நிர்வாகத்தை நடத்த அன்று நாங்கள் தீர்மானித்தோம். ஏனென்றால், அந்த சூழ்நிலையில், யுத்தம் பெரிய அளவில் நடந்து கொண்டிருந்த நேரத்தில் யுத்த களத்தில், எமது போராளிகள் மடிந்து கொண்டிருந்த காலகட்டத்தில், நிர்வாகத்தை நாங்கள் தோள்மீது சுமந்து நடத்துவது சாத்தியமில்லாமல் இருநதது. ஆகவே வெகுசன அமைப்புக்கள் மூலம் இந்த நிர்வாக ஒழுங்கை செயற்டுத்த முடியுமா என பரிசோதனை செய்து பார்த்தோம்.

ஆனால் அதில் பல பிரச் [illegible]

டும் என்று முடிவு எடுத்தார். இந்த முடிவின் அடிப்படையில் படிப்படியாகக் காவல்துறை, நீதி நிர்வாகத்துறை, மற்றும் பல்வேறு அலகுகள் உருவாக்கப்பட்டன பயிற்சிக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. சட்டக் கல்லூரி, வைத்தியக் கல்லூரி என எல்லாத் துறைகளிலும் பயிற்சிக் கல்லூரிகளை அமைத்து நாங்களே எமது நிர்வாகக் கட்டமைப்புகளின் அத்திவாரத்தைப் போடத் தொடங்கினோம்.

இப்படியாக சிவில் நிர்வாகத்தில் எமது போராளிகளுக்குப் பயிற்சி கொடுத்து எமது போராளிகளின் கண்காணிப்பின் கீழ், ஒவ்வொரு நிர்வாக அமைப்பாக தோற்றுவித்து வருகிறோம். இதில் முக்கியமானதுஎன்னவென்று சொன்னால்விடுதலைப் புலிகளின் நிர்வாகக்கட்டமைப்பில் ஒழுக்கம் இருக்க வேணும் கட்டுப்பாடு இருக்க வேணும், கண்ணியம் இக்க வேணும் இல்லாவிட்டால் இந்தப் போராட்டத்தை முன்னெடுப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

### சிங்கள அரசின் நோக்கம்

நீண்டகாலமாக அரசாங்க நிர்வாக இயந்திரம் இருந்துகொண்டே இருக்கிறது. அதன் பங்கு என்ன? தமிழீழ சமுதாயத்தில் பெரியதொரு மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது அரசியல் ரீதியாக, சமூக ரீதியாக பெரியதொரு புரட்சி நிகழ்ந்து கொண்டிருக்கிறது நிர்வாகக் கட்டமைப்புகள் புதிதாக உருவாக்கம் பெறுகின்றன விடுதலைப் புலிகளின் கீழ் ஓர் ஒழுங்கான நிர்வாக அமைப்பு உருவாகி வருகிறது இந்த சூழ்நிலையில் அரசாங்க நிர்வாக சேவையின் பங்கு என்ன? அதில் இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன. கொழும்பு இறையாட்சி அதிகாரததின் எச்சசொச்சமாக இங்கு நிர்வாக அலகுகள் செயற்பட்டு வருகின்றன. அது எங்களுக்குத் தெரியும். இந்த நிர்வாகத்தில் எந்தவிதமான குழப்பத்தையும் ஏற்படுத்த நாங்கள் விரும்பவில்லை. சிங்கள அரசின் இறையாட்சி அதிகாரம் இந்த நிர்வாகக் கட்டமைப்பில்தான் தங்கியிருக்கிறது.

முன்பு, நிழல் நிர்வாகம் என்று இருந்தது. இப்போது நிழலகளையெல்லாம் கலைத்துவிட்டு ஒரு நிஜமான, நிதர்சனமான ஒரு கட்டமைப்பை உருவாக்கியிருக்கிறோம்.

அரசாங்க நிர்வாக அமைப்போடு இணைந்து செயற்பட்டு, அரசாங்க நிர்வாகம் மூலம், தமிழ் மக்களுக்கு கொடுக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகள், செம்மையான முறையில் சரியான வழியில் எமது மக்களுக்கு கிடைக்கிறதா என்பதை கண்காணிக்கும் நோக்குடன் இந்த கட்டமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது, ஆனால்:இது மட்டுடும் எமது நோக்கமல்ல. படிப்படியாக எமது நிர்வாக அமைப்புக்களை விஸ்தரிப்புச் செய்து எங்களால் முடிந்த அளவு, எமது மண்ணில் ஒரு சிவில் நிர்வாக கட்டமைப்புக்களை பலப்படுத்திச் செல்வதும் எமது நோக்கம்.

அரசாங்கசேவையில்வேலை செய்பவர்களின் சிக்கல் அது. எங்களுக்குத் தெரியும். இரண்டு தேசங்கள், இரண்டு ஆட்சிகள் மத்தியில சிக்குப்பட்டு செயல்பட வேண்டிய ஓர் சங்கடமான நிலையில், இவர்கள் இருக்கிறார்கள் இவர்களுக்கு நாங்கள் இதைத்தான் சொல்வோம். அதாவது நீங்கள் எமது மக்களுக்கு விசுவாசமாக இருங்கள் எமது மக்களுக்கு எந்த அளவில், எந்த வகையில் உதவி செய்யமுடியுமோ, அதை செய்யுங்கள் ஒரு தேசாபிமான பற்றுணர்வுடன் அந்த சேவையைச் செய்ய வேண்டும்.

இத்தொண்டு மக்களின் நன்மைக்கானது. மக்களின் மேம்பாட்டுக்கானது, இந்த நோக்கில் இந்த செயற்பாடுகள அமையப் பெறுமனால் அதனால் எமது மக்கள் பயனடைவார்கள என்றார்.

---

### புலிகளை

இத் தாக்குதலின்போது திசையறிகருவி 01, தொப்பி 01, கத்திக் கோல்சர் 01, ஆகிய இராணுவத் தளபாடங்களும விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

---

# பொலிஸ் நிலையங்களுக்கு ஊரடங்கு அனுமதி அட்டை

(கொழும்பு)

ஊரடங்கு சட்ட நேரத்தில் பயணம் மேற்கொள்வதற்கான விசேட அனுமதி அட்டைகள் நாட்டிலுளள அனேகமான பொலிஸ் நிலையங்களுக்கு கொழும்பில் இருந்து அனுப்பப்பட்டுள்ளதாக தனக்கு தகவல் கிடைத்திருப்பதாக சந்திரிகா குமாரணதுங்கா ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இது தேர்தல் சுதந்திரமாக நடைபெறுவதற்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும் இதனால் தேர்தல் காலங்களில் வாக்காளர் இடையே பீதி ஏற்படும் எனவும் இதனைத் தவிர்ப்பதற்கு உதவுமாறும் அவர் மேலும் அக்கடிதம் மூலம் சுட்டிகாட்டியுள்ளார்.

---

## கடல்வள பயிற்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கடல்வள அபிவிருத்திப் பகுதியினர் யாழ்ப்பாண பிரதேச செயலகத்துடன்இணைந்துமீன்பிடியியல் பாடத்தில் க. பொ. த சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு ஒரு விசேட கடல்வளப் பயிற்சி நெறியை ஆரம்பிக்கவுள்ளனர்.

இப்பயிற்சி நெறியானது, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுளளது. பல்கலைக்கழக பேராசிரியர்கள் கடற்றொழில் உத்தியோகத்தர்கள் மற்றும் இத்துறையில் புலமை சார்ந்தவர்கள் இப்பயிற்சி நெறியில் விரிவுரைகளும் செயல் விளக்கங்களும் வழங்கவுள்ளனர்.

இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் உடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனக் கடல்வள அபிவிருத்தி பகுதியினருடன் அல்லது யாழ்ப்பாண பிரதேச செயலருடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் கேட்டுள்ளது

## பரீட்சை

மெய்வல்லுநர் சட்ட விதிகளில் தேர்ச்சி பெற்றோரை தெரிவு செய்வதற்கான பரீட்சைகளை யாழ். மாவட்ட அமெச்சூர் மெல்வல்லுநர் சங்கம் எதிர்வரும் ஆகஸ்ட் 14 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் நடத்தவுள்ளது அன்றைய தினம் காலை 9.30 மணி முதல் பிற்பகல் 1 00 மணி வரை இப்பரீட்சைகள் நடைபெறும்

---

### மண்டைதீவுக்

வைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு மேற்படி மீனவரை மீட்டுக் தரும்படி வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அப்பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை செல்வேந்திரன் அல்லது யோசெப் பிரேம

---

# யாழ். மாவட்ட தேர்தலுக்கு 2000 படையினர் இணைப்பு

(கொழும்பு)

யாழ் மாவட்டத் தேர்தலைக் கண்காணிப்பதற்கும் வாக்களிப் நிலையங்களைப் பாதுகாப்பதற்கும் 2000 பொலிஸ் - ராணுவப் படையினரை மேலதிகமாக அனுப்பி வைப்பதென பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துளளது

தேர்தல் ஆணையாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும்இது குறித்து ஆராய இரு பொலிஸ் அத்தியட்சகர்களும், மூன்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தரத்திலானவர்களைக் கொண்ட குழு ஒன்றும் யாழ் மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

இவர்கள் ஒருவார காலம் தங்கியிருந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆராயவுள்ளனர்.

# முஸ்லிம் காங்கிரஸ் இரண்டாக பிளவடைந்தது

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இரண்டாகப்பிளவுபட்டுள்ளது கொழும்பு மாநகர சபையின் உறுப்பினர் முகமட் பாரூக் தலைமையிலான குழு பொதுத்தேர்தலில் ஐ. தே. கவை ஆதரிக்க முன்வந்ததைத் தொடர்ந்து இப்பிளவு அம்பலமாகியுளளது.

இது தொடர்பாக கொழும்பு மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக முகமட் பாரூக் விடுத்துள்ள அறிக்கையொன்றில்,முஸ்லிம் காங்கிரஸ் தலைவரான எம்.எச் எம். அஷ்ரப் கட்சிக்குள் சர்வாதிகாரத்தனமான போக்கைக் கடைப்பிடிப்பதாகவும், முக்கியமான முடிவுகளை எடுக்கும்போது கட்சி உறுப்பினர்களின் கருத்துக்கு அவர் மதிப்பளிப்பதில்லை எனவும், சுட்டிக் காட்டியிருப்பதுடன் ஒரே இரவில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடன் உடன்பாட்டிற்கு வந்திருப்பதையும் கண்டித்துள்ளார்.

இதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸ் (கொழும்பு), முஸ்லிம் காங்கிரஸ் (மட்டக்களப்பு) என முஸ்லிம் காங்கிரஸ் இரு கூறாகப் பிளவுபட்டுள்ளது.

---

### தொலை

க் கூறப்படுகிறது.

இந்த ஏழாம் துண்டு மூன்றரை கிலோ மீற்றர் நீளமானது என்றும் மோதலினால் 60 லட்சம் மெகாதொன் வெடிப்பொருள் சக்தியை வெளிப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது உலகின் அணு ஆயுதங்கள் அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து வெடித்தால் வெளியாகும் சக்தியை விட பன்மடங்கு அதிகமானது என இவ்வால் வெள்ளியை விண்ணில் முதன்முதலில் கண்டுபிடித்த விஞ்ஞானியான ஷூமேக்கர் தெரிவித்தார்.

இத்துண்டு எமது பூமியில் மோதியிருப்பின் பூமி முழுவதும் தூசு படலம் மூடியிரு

---

## திறப்பு விழாவும் கலந்துரையாடலும்

கோப்பாய் வட்ட உழவர்களிற்காக அமைக்கப்பட்ட பசுமை வேளாண் சேவை திறப்பு விழாவும் விவசாயிகளுடனான கலந்துரையாடலும் இன்று மாலை 4.00 மணியளவில் நீர்வேலி சந்தியில் அமைந்துள்ள பசுமை வேளாண் சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் அனைத்து விவசாயிகளும் கலந்துகொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

---

## இலவச தையல் பயிற்சி

(தொல்புரம்)

பெண்களுக்கான சுய தொழில் வேலைவாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு இலவச தையல் பயிற்சி, வகுப்புகள் யாழ் தேசிய சர்வோதயத்தினரால் ஆரம்பிக்கப்பட்

குத் தெரியும் எமது இயக்கம் ஒரு திட்டமிட்ட முறையில், ஒரு விரிவான, போர முறைத் திட்டத்தினடிப்படையில், இந்தப் போராட்டத்தை எமது இலட்சியம் நோக்கி படிப்படியாக முன்தள்ளி நகர்த்தி வருகிறது. இது ஓர் நீண்ட படிமுறைக்குட்பட்டதாக இப் போராட்டம் நகர்த்தப்படுகிறது.

அப்படியான வழிமுறை இரண்டு பரிமாணங்களைக் கொண்டது.

ஒன்று, சிங்கள ஆதிக்கத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டு இருக்கும் எமது மண்ணை படிப்படியாக மீட்டெடுப்பது.

கடந்த பத்து ஆண்டுகளாக நடந்த போராட்டத்தின் வாயிலாக எமது தாயகப் பூமியின் பரந்துபட்ட பிரதேசங்கள் எமது ஆட்சிக்குட்பட்டிருக்கிறது. இது ஓர் எதார்த்த பூர்வமான உண்மை நிலத்தை மீட்டெடுக்கிறதென்று சொன்னால், ஏதோ வெறும்நிலத்தை பிடித்துவைத்திருப்பதல்ல,

...தோம்.

ஆனால் அதில் பல பிரச்சினைகள் தோன்றின. மக்கள் முன்னணி கட்டியமைத்த அமைப்புக்களில்ஒழுக்கவீனம், சீர்கேடுகள், ஊழல்கள் எனப் பல பிரச்சினைகள் தோன்றின. இப்படியான முறையில், நிர்வாக அமைப்பை செயற்படுத்திக் கொண்டு போனால் இயக்கத்திற்கு அவப்பெயர் ஏற்படும்.

### போராளிகள் கண்காணிப்பில் சிவில் நிர்வாகம்

ஆகவேதான், எமது தலைவர் ஒரு முடிவு எடுத்தார். அதாவது எல்லாத்துறைகளிலேயும் எமது போராளிகளுக்குப் பயிற்சி கொடுக்கப்பட வேண்டும். ஒழுக்கமும், நேர்மையும் கட்டுப்பாடும். கண்ணியமும் உள்ள இலட்சியப் போராளியின்கண்காணிப்பின் கீழ் சிவில் நிர்வாக அமைப்புகள் உருவாக்கப்பட வேண்

சின் இறையாட்சி அதிகாரம் இந்த நிர்வாகக் கட்டமைப்பில்தான் தங்கியிருக்கிறது. அதனால் சிங்கள அரசு அதனைக் கலைக்காது எப்பொழுது இந்த நிர்வாக அமைப்பை அரசு நிறுத்துகிறதோ அன்றிலிருந்து சிங்கள இறையாட்சி அதிகாரம் இங்கு செயற்படாது போகும். தமிழர் பிரதேசத்தை ஓர் தனிப் பிரதேசமாக, ஓர் தனித்துவ அரசாக ஏற்றுக் கொள்வதாக அது முடியும். ஆகவே சிங்கள அரசு இந்த நிர்வாகத்தை தொடர்ச்சியாக செயற்படுத்த விரும்பும். அதற்கு வேறு காரணங்களும் இருக்கின்றன. ஒரு காலம் இராணுவம் இந்தப் பிரதேசத்தை மீட்கும், அப்பொழுது தனது இறையாட்சி அதிகாரத்தை நிறுவலாம் என சிங்கள அரசு கற்பனை பண்ணிக்கொண்டிருக்கிறது. அதே வேளையில் விடுதலைப் புலிகள் இயக்கம், ஒரு நுட்பமான ஆட்சியமைப்பை உருவாக்கி வருகிறது.

டங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

### வீரச்சாவு

தாஸ், புதிய கடற்கரைவீதி, குருநகர், யாழ்ப்பாணம்) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

இம் மாவீரனின் திருவுருவப்படம் இன்று காலை 10-00 மணிக்கு இவரது இல்லத்தில் இருந்து அணிவகுப்பு மரியாதையுடன் எடுத்துச் செல்லப்பட்டு குருநகர் றெக்கிளமேசன் சன சமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் இடம்பெறும். அஞ்சலிக் கூட்டம் நிறைவுற திருவுருவப் படம் கோயில் வீதி ஊடாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நினைவுக் கல் நாட்டப்படும்,

செல்லத்துரை செல்வேந்திரன் அல்லது யோசெப் பிரேம தாஸ் என்னும் மீனவரே தப்பிவந்தவராவார். (21)

### மீனவர்

களை ஜெனிவா தலைமைக் காரியாலயத்திற்கு அனுப்பி வைத்துள்ளோம்.

இராணுவத்தினரிடமிருந்து இவரை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர்குறிப்பிட்டார்.

மோதியிருப்பின் பூமி முழுவதும் தூசு படலம் மூடியிருக்கும் எனவும் சூரியன் கருமையாகியிருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வால் நட்சத்திரத்தின் அடுத்த இரு துண்டுகளில் ஒன்று இன்று இரவு 8 39க்கும் மற்றையது நாளை இரவு 8 40க்கும் மோதும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடைசித் துண்டு வெள்ளி பிற்பகல் 1. 45க்கு வியாழனுடன் மோதவுள்ளது.

### மோட்டார்

மேலும் தங்களிடம் திருத்தத்திற்கு விடப்பட்டிருக்கும் மோட்டார் ஊர்தி இயந்திரங்களும், அடிச்சட்டங்களும் பதிவுக்குட்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வாறு பதிவிற்குட்படுத்தாத ஊர்திகளும், இயந்திரங்களும், அடிச்சட்டங்களும் வைத்திருப்போர்மீது தொடர்ந்தும் தமிழீழ காவல்துறையினரும், மோட்டார் ஊர்திப் பதிவுப்பகுதியினரும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வர் என்பதை, மோட்டார் ஊர்திகள் திருத்துனர்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப்பிரிவின் மோட்டார் ஊர்திப் பதிவுப்பகுதியினர் அறியத்தருகின்றனர்.

யத்தினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். நகரிலுள்ள சர்வோதய மாவட்ட தலைமை அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இலவச பயிற்சிநெறி வகுப்புக்களில் தையல்கலை சிகையழகு அலங்கரிப்பு, கேக் ஐசிங், மனையியல் போன்றவற்றிற்கான பயிற்சிகள் சிறந்த முறையில் வழங்கப்படுகின்றன. இந்த பயிற்சி நெறிகளில் பங்கு பற்ற விரும்புவோர் காலம் தாழ்த்தாது யாழ் இராசாவின் தோட்டத்திலுள்ள சர்வோதய மாவட்ட நிலையத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (41)

### தமிழீழ

வழங்கினார் சத்தியப் பிரமாணமும். ரகசியக் காப்பு பிரமாணமும் சம்பிரதாய பூர்வமாக செய்துவைக்கப்பட்டது.


மிக விரைவில்

தமிழோசை, இது எங்கள் தேசம், தாயகக் கனவு, சின்ன விழிகள் போன்ற வெற்றிப் படைப்புகளைத் தந்த

பொ. தாசனின் மற்றுமொரு பிரமாண்டமான படைப்பு

இன்னும் ஒரு நாடு

தயாரிப்பு: முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகம்

(சி/9937)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது